www.tamilarangam.net

ஜூன் - ஜூலை

18

'SAMAR'
87,Rue de colombes
92600 Asnieres sur seine
FRANCE

# சமர்

வெளியீடு - தமிழ் அகதிகள் வட்டம்　　பதிவுசெய்யப்பட்டது 3 16956

# யாழை மீளக் கைப்பற்றுவது எப்படி?



யாழ் நகரை கைப்பற்றியதை மறந்துவிட முயலும் புலிகளும், அதன் ஆதரவாளர்கள் ஒருபுறமும்: மறுபுறம் மக்கள் மீளப் போகும் கனவுகளுடன் ஒருபுற முமாக யாழ் நகரை மீளக் கைப்பற்றுவது என்பது மக்கள் மீள அங்கு செல்வதன் மூலமே போராடவும், இராணுவத்தை அழித்தொழிக்கவும் முடியும்.

யாழ் நகரை பேரினவாத பாசிச இனவெறியர்கள் அதன் சொந்த மக்களைத் துரத்தி தமது இன வெறிக் கொடியைப் பறக்கவிட்டு, சிங்கள இனவாத தேசிய கீதத்தையும் இசைத்து இன்று ஒரு சில மாதங்கள் ஆகிவிட்டன. இந்த ஆக்கிரமிப்பும், அதன் தொடர்ச்சியில் எழுந்துவிட்ட கோபமும் வழமைபோல் மறந்துவிடும் ஒரு செயலாக மாற்றப்பட்டு வருகின்றது. புலிகளும், அதன் ஆதரவாளர்களும் இது பற்றி மௌனம் சாதித்து வருவதுடன், அவர்களின் வெளியீடுகளும் வேறுபிரச்சனையை முன் கொண்டுவருகின்றன.

இவற்றையெல்லாம் ஒருபுறம் போராடுபவர்கள் தங்களின் சுய நலம் கருதி செய்துவர, மறுபுறமாக மக்களோ சொல்லமுடியாத துன்பத்துடனும், மண்ணை இழந்துவிட்டதை மறக்கமுடியாத - மறக்கத் தயாரற்ற- துயருடனும் உள்ளனர். அவர்கள் அங்கு திரும்பிச் செல்ல புலிகளுடன் கூட முட்டி மோதும் நிலையும், அதன்மூலம் மரணமடையும் நிலையிலும், உள்ளனர். ஆயிரமாயிரம் இளைஞர்கள் தமது முரண்பாடான நிலையிலும் கூட புலிகளில் இணைந்து வருகின்றனர். போராடுவது புலிகளாக மட்டுமே இருப்பதால், புலிகள் எப்படியாவது மண்ணை மீட்டுத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் ஒருபுறமும், வடமாராட்சி, தென்மராட்சியையும் பறிகொடுக்கப் போகிறோம் என்ற பிரச்சாரத்தால் அதைத் தடுத்துநிறுத்த போராடதயாராகும் மீ்நிலையிலும் இவர்கள் இணைந்து வருகிறார்கள்.

புலிகளின் இன்றைய நிலையில் வடமராட்சியையோ தென்மராட்சியையோ இழப்பிலிருந்து தடுப்பது முடியாத காரியமாகும். ஆனால், சரியான வகையில் போராடினால் இதைத் தடுத்து நிறுத்தவும் முடியும். இந்நிலையில் குடாநாட்டைப் புலிகள் கைவிட்டுச் செல்லும் போக்கு விரவிநிற்கின்றது. குடாநாட்டைக் கைவிட்டால் ஒருக்காலுமே தம்மை காடுகளில் வைத்து அழிக்கமுடியாது என்ற புலிகளின் நிலை, எப்போதும் வெற்றிகளையும், தாக்குதலையும் வைத்து அரசியல் பேசிவந்த புலிகள், தமது இந்நிலையைப் பேண குடாநாடு தடையாக இருந்து வந்தது.

காடுகளை நோக்கி நகர்வதும்- இராணுவம் முன்னேறும்போது காடுகளின் பின் செல்லலும், மீள மீள முன்னேறுவதும் என்ற கிழக்கு மாகாண புலிகளின் நிலையை ➤ பக்:5

## மார்க்ஸின் பெயரால்




ஒரு கோட்பாட்டு யுத்தம்!



www.tamilarangam.net

# மக்களை மந்தைகள் என்போரின் வாக்குமூலங்கள்




வேலை நிறுத்தம் செய்வது முதலாளிகளுக்கு நட்டமே என்ற ஒரு வாசகனின் கேள்விக்கு புலிகள் சார்பு ஈழமுரசின் பதில்: முதலாளிகளுக்கு நட்டமில்லை உமக்குத்தான் நட்டம் எனக் கூறியுள்ளனர்.



புலிகள்சார்பு ஈழமுரசு முதலாளி வர்க்க விசுவாசத்தை இதன் மூலம் ஒரு தொழிலாளிக்கு பிரகடனம் செய்துள்ளது. ஒரு தொழிலாளி வேலைநிறுத்தில் இழக்கும் பணம், அவனின் அன்றாட வறுமையுடன் பெரிது அல்ல. ஆனால் ஒரு தொழிலாளி வேலை செய்யாமல்விடின் ஒரு முதலாளியின் உழைக்காத ஆடம்பர வாழ்வு என்ற பேச்சே இருக்கமுடியாது. ஒரு தொழிலாளி வேலைசெய்தால் தான் ஒரு முதலாளி இருக்க முடியும்.

நவ.10- அரசுசார்பு தினகரன் முன்பக்கத்தில் மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்க அறிக்கையில்: யாழ் மக்களை முகமூடி அணிந்த புலிகள் வீடுகளை விட்டுத் துரத்துகின்றனர். எனச் சொல்லப படுகிறது. அரசுவிடும் அறிக்கையில்: யாழ் மக்களை புலிகள் வெளியேற்றியது இராணுவ மூல உபாயம் சார்ந்தது என பிரகடனம் செய்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிவசிதம்பரம்: World wide Television க்கு வழங்கிய பேட்டியில்: யாழ் குடாநாட்டுச் சண்டையில் இராணுவம் நன்றாக நடந்து வருவதாகவும், அவர்கள் பற்றி எந்த முறைப்பாடும் கிடையாது எனக் கூறி இராணுவத்தைத் தூக்கிப் பாராட்டியுள்ளனர்.



இவை மூன்று வெவ்வேறு ஜனநாயக விரோதிகளின் அறிக்கையாக இருந்த போதும் ஒன்றாகப் பொருந்தி வருவது ஆச்சரியமானது அல்ல. ஒவ்வோர் அடி மண்ணும் செல்க ளால் வெடிக்க வைக்கப்பட்டு முன்னேறிய இராணுவம் தமிழ் மக்களை அங்கிருக்கும்படி கூறுவது சாத்தானின் வேதமே. இதே மனித உரிமைக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரி யர்களான டொக்ரர் சிறிதரன், கூல், வசந்தா மற்றும் அனைவரும் நாமறிய எம் மண்ணில் வாழ்ந்த காலங்களில் இராணுவமானது முன்னேறிய வேளைகளில் ஓடியவர்களே. அன்று புலிகள் இவர்களின் வீடுகளில் முகமூடியுடன் வந்ததுமில்லை. மாறாக இராணுவம் சுட்ட படி கண்ணில்பட்ட எல்லாவற்றையும் துவசம் செய்தபடி முன்னேற ஓடியவர்களே.

ததுமின்றி, யோகேஸ்வரின் வீட்டை எரித்தது முதல் அன்றுசெய்த இராணுவ அட்டாகாசங்களுக்காக சிங்கள இனவாத விசுவாசிகளின் மீது பாய்ந்தனர். இன்று இப்படி அறிக்கைவிடும் இந்த சோற்றுப் பன்றிகள் முடிந்தால் இன்று இராணுவம் முன்னேறிய பகுதிகளில் போய் நிற்கட்டும் பாப்பம். இராணுவம் அன்பாக தங்கள் இனவாத சந்திரிக்காவின் சீலையில் தொங்குபவர்கள் என விட்டுச்சென்றுவிடுமா? எந்த மக்களின் காதில் பூ வைக்கும் நினைப்பிது? சிங்கள இனவாதிகளின் ஊதுகுழலுக்கே இந்த நிலை எனின், சாதாரண மக்கள் எந்த மூலைக்கு. அவர்களுக்கு இராணுவம் கொடுப்பது ஒவ்வோர் அடி நிலத்தின் மீதும் குண்டை வெடித்து மக்களின் குடலை உருவி தாம் முன்னேறுகின்ற வெற்றியென்ற பரிசை

www.tamilarangam.net

# ஆயிரமாயிரமாக தம் உயிரை இறந்து போராடுபவர்கள் அடிமைத்தனத்திலிருந்து உலகை மீட்கவே!



சிறிலங்கா இனவெறி பாசிச அரசு தமிழ் மக்களை சொந்த இடங்களை விட்டுத் துரத்தி, அம்மக்களின் மண்ணை ஆக்கிரமித்த இன்றைய நிலையில் ஆயிரமாயிரம் இளைஞர்கள் தம் வாழ்வை போராட்டத்துடன் இணைத்து வருகின்றனர். இந்த இணைவு என்பது மாற்றுக் கருத்து இல்லாத ஒரு தளத்தில், ஒரு சார்பு பிரச்சாரத்துடன், புலி களின் பல்வேறு புற நிர்ப்பந்தங்களினூடே, சொந்த மண்ணை மீட்கும் கனவுடன், சொந்த மக்களைப் பாதுகாக்கும் நிலைப்பாட்டுன் தமது உயிரை இழக்கத் தயாராக போராட்டத்தில் இணைகின்றனர்.

ஒரு மனிதன் போராடுவது வாழ்வதற்காகத்தான். அப்படி போராடும் போது ஒருவேளை இறந்து போகலாம். ஆனால் புலிகளுடன் இணைவு என்பது வாழ்வு என்பதற்குப் பதில் மரணம் என்பது ஓர் எழுதாத விதி. ஏனெனில் புலிகளின் தவறான அரசியல், அவர்களின் மதிநுட்பமற்ற செயல்கள் தற்கொலைக்கும் போராடுபவர்களை இட்டுச் செல்கி றது. புலிகளுடன் இன்று இணைபவர்கள் புலிசார்பு அரசியலை ஏற்று இணைபவர்கள் அல்லர். மாறாக இனவெறி அரசின் கோரத் தாக்குதல், அம்மண்ணின் மக்களைத் துரத்திய இனக்கொரூரத்தின் முகத்தை ஓங்கிக் குத்த தன்னெழுச்சியாக, தம்மை ஆயுதபாணியாக்க முனைகின்றனர். அதன் தளம் புலிகளாக இருப்பதால் அவர்கள் புலிகளில் இணைகின்றனர். எந்த விடுதலைப் போராட்டத்திலும் சரி, புலிகளின் போராட்டத்திலும் சரி இணையும் ஒவ்வொரு போராளியும் மதிப்புக்குரியவர்கள். அவர் கள் சொந்த அடிமைத்தனத்தை உடைத்தெறிய விரும்புபவர்களே.

உதாரணமாக: ஒரு பெண் தன்மீதுள்ள ஆணாதிக்கத்துக்கு எதிராகவும், சுரண்டலுக்கு எதிராகவும், எல்லாவித அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்து சுதந்திரமான மனிதர்களாக வாழ விரும்புகின்றாள். ஆனால் இப்படிப் போராட விரும்புபவர்கள் மீது இரும்புக் கரம்கொண்டு அடக்கி, தமக்கு சேவகம் செய்ய பணியவைக்கும் ஒரு தலைமை உருவாகின், அப்போராட்டம் என்பது பிரமிக்கத்தக்க வகையில் ஒரு விலங்கை உடைப்பதைப்போல் தோன்றினாலும், மறுவிலங்கை அவர்களுக்குத் தெரியாமல் மாட்டிவிடுவது நடந்தவண்ணமே உள்ளது.

www.tamilarangam.net

உலகில் மனிதன் அறிவைப்பெற்ற காலம் முதல் அவன் சுதந்திரமானவனாக, எந்த நிர்ப்பந்தம் எதுவுமின்றி உலகின் இயற்கை விதிக்குள் போராடி வந்தான். கடந்த 2,500 வருடங்களுக்கு முன் பல்வேறு சமுதாயத்தில் ஒரு வரையொருவர் சுரண்டுவது என்பது இருந்திருக்கவில்லை. அனைத்துச் சொத்தும் சமூகத்தின் சொத்தாக இருந்தது. அவரவர் தேவைக்கு ஏற்ப தேவையானதை சமூக உற்பத்தியிலிருந்து பெற்றனர். யார் - யாருக்கும் அடிமையில்லை. யார் யாரையும் கட்டுப்படுத்தவும் இல்லை. எல்லோருக்கும் பொதுவானதே சொத்து. எல்லோரும் சேர்ந்தே உழைத்தனர்.

ஆனால் இன்று ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்தல், சொத்துக்கள் தனித் தனியாக சொத்தாக்கப்பட்டுள்ளது. ஒருவன் உண்ண உணவின்றிக் கையேந்தும் போது, மற்றவன் அதை ஆடம்பரமாக ஒருவித பிரியோசனமும் இன்றி வீசி எறிகிறான். எந்த உயிரினத்திலும் இல்லாத ஓர் அடிமைத் தனத்தை இன்று மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று விடுதலை என்பது எல்லாவித அடிமைத் தனத்தையும் ஒழிப்பதில் சார்ந்துள்ளது. போராடும் ஒவ்வோரு மனிதனும் அதன் பாதையில், அதன் வழிகளில் ஏதோ ஒரு பகுதியை தெரிந்தோ தெரியாமலோ கொண்டிருப்பதால் அவன் மதிப்புக்குரியவன் ஆகிறான்.

ஆனால் சுதந்திரமான விடுதலையை. விலங்காக விலங்கை மாற்றும் அடிமைத் தனத்தை மீள உருவாக்கும் சுரண்டலை அங்கீகரிக்கும் ஒரு விடுதலைக்காக இட்டுச் செல்லும் தலைமைகள், போராட்டங்கள் அப் போராளிகளின் தியாகத்தையே அவர்களின் உயிரிழப்பையே அர்த்த மற்றதாக்கி விடுகின்றது. இது தமிழ் ஈழப் போராட்டத்தில் புலிகளின் பின் அணிதிரளும் ஆயிரமாயிரம் வீரர்களின் தியாகத்தை, அதன் அர்த்தமுள்ள மரணங்களை ஆளும் வர்க்கத்தின் எந்த இயல்பையும் தகர்க்காத வகையில் மட்டும் போராட இட்டுச் செல்வது என்பது விமர்சனத்துக்குரியது. அந்த மரணங்கள் அர்த்தமற்ற தியாகங்களாக இந்தச் சுரண்டல் சமுதாயத்தில் சரண்டுபவன் வாழ அவன் இருப்பைப் பலப்படுத்த செய்யும் முயற்சி மக்களை மேலும் மேலும் அடிமையாக்குவதற்கு இட்டுச் செல்லும் செயலாகும் ○



# ஐக்கியநாட்டு படைகள் மூலம் பாரிய ஆக்கிரமிப்புக்கள்



இன்று உலகில் பல நாடுகள் மீதான ஆக்கிரமிப்புக்கள் ஐ.நா மூலம் செய்யப்படுகின்றது. இதற்கு அமெரிக்கா தலைமை தாங்குவதுடன் எல்லா நாட்டுப் படைகளையும் அதில் ஈடுபடுத்துவதன் மூலம் ஏகாதிபத்தியங்கள் தமக்குள் முரண்பட்ட படி நாடுகளை மறுகாலனி ஆக்குகின்றன. இவற்றைச் செய்வதற்கு பெருமளவு பணத்தை ஐ.நா சபை இராணுவத்துக்காக ஒதுக்குகின்றது. இராணுவ நடவடிக்கைக்கான ஐ.நா வின் ஒதுக்கீடு 1986ல் 1200 கோடி ரூபாய்களாக இருந்தது. இது இன்று அதாவது 1994ல் 18,500 கோடியாக அதிகரித்துள்ளது. அதாவது எட்டு வருடங்களில் 15 மடங்காக அதிகரித்துள்ளது. இதன் மூலம் இன்று உலகில் ஐ.நா படைகள் மூலம் ஆக்கிரமித்து ஏகாதிபத்தி யங்கள் தமக்கிடையில் பங்கிட்டுக் கொள்கின்றன. இந்த வகையில் இன்று யுக்கோசிலோக்கியாவில் 70 ஆயிரம் படைகளை குவித்துள்ளனர். சமாதானம் என்ற பெயரில் யுக்கோசிலோக்கியா பலமாக பிரிக்கப்பட்டு ஏகாதிபத்திய சூறை யாடலுக்கு இசைவாக மாற்றப்படுகின்றது.

# மயானமானது ஈராக்

ஈராக் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையுத்தரவின் காரணமாக கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும், இந்நாட்டில் ஐந்து வயதுக்குக் கீழான 5,67,000 குழந்தைகள் சத்தான உணவு மருத்துவ வசதியின்மை காரணமாக இறந்துபோய் உள்ளனர். இக் கொலை பாதகச் செயலை மறைத்துவிட்டு மேற்குலக நாடுகள் ஈராக் வசம் இன்னும் இராசாயண ஆயுதங்கள் இருப்பதாக பழிபோட்டு தடையுத்தரவைத் தொடர்ந்து அமுல்படுத்துகின்றன.

நன்றி! புதிய ஜனநாயகம்

"நமது சொந்த விருப்பத்தைப் பொறுத்தவரை நாம் ஒருநாள் கூட போரிட விரும்பவில்லை. ஆனால் சூழ்நிலைகள் நம்மைப் போரிடும்படி நிர்ப்பந்தித்தால் நாம் இறுதிவரை போரிட முடியும்."

~மாஓசேதுங்~



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# யாழை மீள...

1ம் பக்கத் தொடர்...

வடக்கில் புலிகள் செய்ய கங்கனம் கட்டி நிற்கின்றனர்.

இதனால் யாழ் குடாவைக் கைவிட வும் தயாராகி விட்ட புலிகள், அங்கி ருந்த மக்களை தம்முடன், தமது கட்டுப்பாடு பிரதேசங்களில் வைத் திருக்க எல்லாவித மக்கள் விரோதச் செயல்களையும் செய்யத் தயாராகி உள்ளனர். மட்டக்களப்பு நகரில் முற் றாகத் துடைத்தெறியப்பட்ட புலிகளின் நிலை, யாழ் குடாநாட்டில் ஏற்படக் கூடாது என்ற புலிகளின் பயம், இனவெறி இராணுவத்தின் அழித் தொழிப்பில் சொந்தப் பிரதேசத்தை விட்டு தப்பிவந்த மக்களை பலவந் தமாகத் தடுத்துவைத்திருக்க புலிகள் தயாராகி விட்டனர்.

மக்கள் மீளவும் தமது பிரதேசங் களுக்குச் செல்ல புலிகளுக்கெதிராக தன்னிச்சையாக பல இடங்களில் மோ தியதும், தமது உயிரை இழந்த செய்திகளும் இன்று கசிந்து வருகின் றன.

யாழ்குடாநாட்டை முற்றாகக் கைவிட தயாராகிவிட்ட புலிகள், ஒருக்காலுமே அதை மீளக் கைப்பற்றுவதென்ற பலமான எண்ணம் அதற்குக் கிடையாது. மாறாக தங்களை நிலை நிறுத்திக் கொள்ள ஊடுருவிய தாக்கு தல்களை நடத்துவதற்கு அப்பால், யாழ் குடாநாட்டினைக் கைப்பற்றும் வகையில் ஓர் அழித்தொழிப்பு யுத்தத்தை நடத்தத் தயாரின்றியுள் ளனர்.

இன்று யாழ் குடாநாடு பற்றி, அதை மீளக் கைப்பற்றுவது பற்றி ஏதாவது பேசப்படுகிறது எனின் நபர்களை சேகரிப்பதற்கும், பணம் சேர்ப்பதற் கும் மட்டுமேயாகும். இதற்கு அப்பால் ஒரு தேசியத்தின் சுயநிர்ணயத்தை எடுக்கும் நோக்கிலல்ல. யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவது பற்றிய பல்வேறுபட்ட மக்களின் பலத்த கேள்விகளின் ஊடே இவர்கள் குறிப்பிடுவது:

* 1981 முதல் நாம் கொரிலாத் தாக்குதல் மூலமே யாழ் குடா நாட்டைக் கைப்பற்றினோம்.
* 2ம் உலக யுத்தத்தில் சோவி யத்தை ஆக்கிரமித்த நாசிக ளை சோவியத் படை முற்றாக தோற்கடித்தது.

இவையிரண்டையும் பயன்படுத்தி பல கருத்துக்களைக் கூறியே ஆள் சேக ரிப்பையும், நிதி சேகரிப்பையும் செய் கின்றனர். இது இரண்டுமே சாத்திய மானதா? நிச்சயமாக இல்லை.



கொரிலாத் தாக்குதல் என்பது மக்களுக்குள் இருந் து கொண்டே செய்வதாகும். இன்று யாழ் குடாநாட்டில் கொரிலாத் தாக்குதல் என்ற மக்கள் யுத்த வடிவத்தில் எதுவுமே சாத்திய மில்லை. ஏனெனில் மக்கள் அங்கில் லை. உதாரணமாக:- ஒரு சிங்களப் பிரதேசத்தில் எப்படித் தமிழ் மக்கள் இல்லாமல் அங்கு உயிர்வாழ முடியா தோ, அதேபோல்தான் யாழ்குடாநாடு இன்று உள்ளது. ஊடுருவித் தாக்குதலை நடத்த முடியுமே ஒழிய கொரிலாத் தாக்குதல் வடிவத்தைச் செய்யமுடியாது. ஊடுருவித் தாக்குத லால் விடுவிக்காது. மக்கள் யுத்தத் தையும் நடத்தாது. பணம் சேகரிக் கவும், கவர்ச்சிவாத ஆட்சேர்ப்புக்குமே உதவும்.

இரண்டாம் உலகயுத்த நிலைமையில் சோவியத் தின் இன்று புலிகள் உள்ள னரா? நிச்சயமாக இல்லை. அன்று சோவியத் நாசிகளின் நாடுகள் முதல், நாசிகள் ஆக்கிரமித்த ஆக்கிர மிக்காத நாடுகளிலும் கம்யூனிசக் கட் சியைக் கொண்டிருந்தனர். அவர்கள் அந்நாடுகளில் புரட்சிகரமான நிலை யில் போராடியதுடன், 20 லட்சம் கொரிலாக்களைக் கொண்ட மிகப் பெரிய கொரிலாப் பிரிவு நாசிகளுக்கு எதி ராக மக்களுடன் மக்களாக உள்ளிருந்து போராடினர். அதைவிட பல்வேறு நாடுகள் ஆதரவாக யுத்தத்தில் குதித்ததும், சர்வ தேச தளமே சோவியத்தின் பின்னிருந் தது. அதைவிட சோவியத் மக்கள் யுத்தத்தைத் தாமே நடத்தினர்.

ஆனால் புலிகளின்று வியாபாரப் புலிக ளாகவும், பணம்பறிக்கும் புலிகளாகவும், மக்கள் விரோதப் புலிகளாகவும் உள்ள னர். சொந்தமக்கள் யுத்தத்தில் பங்கு பெறாத, தப்பியோட விரும்பும் ஒரு பார்வையாளர்கள். அவர்கள் புலிகளைக் கண்டு வெருட்சியுடன் மௌனம் சாதிக் கின்றனர். மற்றைய இனவாத சிங்கள, முஸ்லிம் சாதாரண மக்களை படுகொலை செய்ததன் மூலம் முழுமையாக அம்பலப் பட்டு ஆதரவு இழந்துபோய் உள்ளனர்.

இந்தியாவில் ராஜதந்திரமற்ற நடவடிக்கை கள், மற்றும் மக்கள் விரோத நடவடிக் கைகள் புலிகளைத் தனிமைப்படுத்தி உள்ளது. சர்வதேச ரீதியாக எந்த ஆதரவையும் பெறமுடியாத ஒரு நிலை யை புலிகளின் கடந்தகால செய்கைகள் வழிநடத்தி வந்துள்ளன.

யாழ் குடாநாட்டை மீளக் கைப்பற்றுவது என்பது போராட்டத்தையே ஜனநாயகப்ப டுத்துவதில் பூரணமடையும். மக்களின் மீதுள்ள அடக்குமுறைகள் நிற்கப்பட வேண்டும். ஒரு தேசியத்தை மீட்க, பாது காக்க எல்லாத்தரப்பு ஒத்துழைப்பையும் பெறும் வகையில் புலிகளின் அரசியலில் மாற்றம் ஏற்பட வேண்டும்.


மற்றும் யாழ் மக்கள் மீளவும் தமது பிர தேசத்திற்கு மீளச்செல்ல அனுமதிப்பதன் மூலமே, அங்கு கொரிலாத் தாக்குதலின் மூலம் இராணுவத்தை அழித்தொழிக்க முடியும். இதன்மூலமே யாழ் குடாநாட்டை மீளக் கைப்பற்ற முடியும். மக்களில்லாத எந்தப் பிரதேசத்தையுமே மீளக் கைப்பற் றுவது என்பது, மக்கள் போராட்டத்தில் இணையும் ஜனநாயகம் வழங்கப்படுவது மட்டுமன்றி, அப்பிரதேசத்தில் மக்களை எப்படியாவது வாழவைக்கவும், சொந்த மண்ணை முத்தமிடவும் அனுமதிக்க வேண்டும். 10-பக்கம் பார்க்கவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏகாதிபத்தி ஜனநாயக வாதிகளின்



# சில வாக்குமூலங்கள்

ரஷ்யா,மற்றும் கி.ஐரோப்பிய நாடுகளின் போலிக் கம்யூனிஸ்ட் ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டதன் பின் கமியூனிசத்திற்கு எதிராகச் செயற்பட்ட அமெரிக்க, மற்றும் ஐரோப்பிய உளவாளிகள், சதிகாரர்கள் மறைக்கப்பட்ட பல உண்மைகளை தற்பொழுது வெளியிட்டு வருகின்றனர். இந்த கைக்கூலி கழிசடைகள் 'கம்யூனிஸ்டுக்கள் நல்லதையே செய்தார்கள்' என்றும் 'தாங்கள்தான் சதி செய்ததாகவும்' வெட்கமின்றி ஒப்புக் கொள்கின்றார்கள். தங்களை 'ஜனநாயகவாதிகள்' என அழைத்த இந்த யோக்கியர்கள் செய்ததெல்லாம் மக்கள்மீதான படுகொலைகளும், சர்வாதிகாரர்களை ஆதரித்ததுமே ஆகும். அமெரிக்க ரீவி ஸ்தாபனம் ஒன்று தயாரித்த 'தென்கிழக்கு ஆசியா' பற்றிய நிகழ்ச்சியில் கூறப்பட்ட சில வாக்குமூலங்கள் இங்கு தரப்படுகிறத. பலதரப்பட்ட கூரத்துகளாக இவை உள்ளன. பல உண்மைகளும் கசிகின்றன.

## 1. சீனாபற்றி

● ஜோன் கேவிஸ் (John service) (அமெரிக்க வெளிநாட்டு அமைச்சரவையைச் சேர்ந்தவர். 1933 - 1945.)

''சீனக் கம்யூனிஸ்டுகள் மிகவும் திறமைசாலிகளாக இருந்தார்கள். அவர்கள் தங்களை மொஸ்கோவிடம் தங்கியிருப்பதை விடுவித்துக் கொண்டார்கள். தங்கள் நீண்டகாலப் போராட்டத்தால் இதைச் சாதித்தார்கள். அவர்கள் தாம் வெற்றியீட்டிய பகுதிகளை மிகவும் இறுக்கமாக தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டார்கள். மக்களின் செல்வாக்குத்தான் தங்கள் எதிர்காலம் என்பதை அவர்கள் நிருபித்தார்கள். முதலில் நிறைய மக்களைக் கண்டதும் நாம் வடசீன அகதிகள்தான் ஒளிந்து வாழ்வதாக நினைத்தோம். பின்னர்தான் அவாகள்தான் போராளிகள் என உணர்ந்தோம். அவர்களிடம் காணப்பட்ட அதீதநம்பிக்கையைப் பார்த்தபோது மிகவும் அதிசயமாக இருந்தது.''

அல்பிரட் பொஸ்காட் (Alfred bosshardt) (மிசனரி அமைப்பினர். - நீண்ட படைநடப்பின்போது கைதுசெயயபபடடவா)

''சீனகம்யூனிஸ்டுக்கள் ஏழைகளுடன் மிகவும் அன்பாகப்பழகினர். ஆனால் அடக்குமுறையாளாகள் மீது கொடூரமாக நடந்தார்கள்: அது Roben hood ஆட்கள் மாதிரி இருந்தது. பண்ணைமார்கள் மீது மிகவும் கடுமையாக நடந்துகொண்டார்கள்.''

www.tamilarangam.net

# 2. கொரிய யுத்தம் பற்றி

## Johan service

"அமெரிக்கா கொரியாவில் U.N என்ற போர்வையில் யுத்தத்தை நடாத்தியது. சீனா கொரியாவுக்கு ஆதரவாக இருந்தது. உலக கமியூனிச திட்டத்தின்படி அவர்கள் செயற்பட்டனர். "Yalu நதிக்கு இராணுவத்தை அனுப்பக் கூடாது" என சீனா எமக்கு எச்சரிக்கை விடுத்தது. ஆனால் நாம் சமிக்கைகளைக் கண்டுகொள்ளவில்லை. அனுப்பப்பட்ட செய்தியாளர்களை நம்பாததால் இது நிகழ்ந்தது. இந்நடவெடிக்கை முற்றுமுழுதான விளக்கமில்லாமல் நடைபெற்றது. ஏனெனில் சீனா எம்மை முழுமையாக தனிமைப்பட வைத்தது."

## TV அறிவிப்பாளர்

25,000 அமெரிக்க இராணுவமும், ஒரு மில்லியன் சீனர்களும் 3 வருடங்கள் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டனர். 1945ல் வியட்னாமில் அமெரிக்கா தனது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது. வியட்னாமின் விடுதலைப்போரின் தளபதியான ஹோ சி மின் ற்கு ஆதரவாக சீனா நின்றது. அமெரிக்க அரசியலை வியட்னாமில் நடைமுறைப் படுத்துவதற்கான உதவியைப்பெற அமெரிக்க நாசகாரப்படையான CIA பொய்த் தகவல்களை வெளியிடும் கொள்கையை மேற்கொண்டது.

## ஜோய் சிமித் (Jeo smith) CIA 1950-1973

நான் ஒரு பத்திரிகையாளரின் தொடர்பைப் பெற்றேன். அவர்மூலம் ஒரு கதையைக் கட்டவிழ்த்து விட்டேன். அது வருமாறு:

சீன இராணுவ வீரர்களும், இராணுவத்தளபாடக் கப்பல்களும் ஹோசிமின்னிற்கு ஆதரவாக HI FONG துறைமுகத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன, என்பன அது!! இது சர்வதேச செய்தி ஸ்தாபனங்களால் உள்வாங்கப்பட்டது. நாம் எதிர்பாத்த கருத்தை உலகம் முழுவதும் பரப்பியது. ஜெனிவா மாநாட்டையடுத்து எல்லோரும் வியட்னாமில் அமைதியை எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்படி நடக்கமுடியாது என நாம் சொன்னோம். ஏனெனில் சின கம்யூனிஸ்டுகள்தான் பின்னணியில் நிற்கிறார்கள் என்றோம். அதிஸ்ட வசமாக எங்களிடம் மக்களை நம்பவைக்க எவ்வித ஆதாரமும் இருக்கவில்லை."

## TV அறிவிப்பாளர்

சீன கம்யூனிஸ்டுக்களை எதிர்ப்பதற்காக அமெரிக்கா சியாங்கேசெக் ஐ பெருமளவில் ஆதரித்தது. சியாங்கேசெக் ஒரு சர்வாதிகாரியாகவே திகழ்ந்தார். ஆயிரக்கணக்கான எதிர்க்கட்சித் தலைவர்கள் அவரது ஆட்சியில் நரவேட்டையாடப்பட்டது தெரிந்தும் அமெரிக்கா அவரை "உண்மையான ஜனநாயகவாதி" "ஜனநாயகக் காவலன்" என வர்ணித்தது.

HENRY LUCE என்பவர் சியாங்கேசெக் பற்றிக் கூறும்போது "அவர் கடவுளை நம்பும் கிறிஸ்டியன்: உண்மையான ஜனநாயகவாதி" என்றார்.

## வியட்னாம் பற்றி கெனடி



"எங்களை வியட்னாமிலிருந்து வெளியேறச் சொல்பவர்கள் தவறு விடுகிறார்கள். நாம் அப்படிச் செய்தோமானால் கம்யூனிட்டுக்கள் அரசமைத்து விடுவார்கள். அது நடப்பின் தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், மலாயா, தென்கிழக்கு ஆசியா முழுவதுமே கம்யூனிசவாதிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிடும்: சீனர்களின் ஆதிக்கமாகிவிடும்."

இந்த 'அரசியல் கழிசடை'கெனடியைத்தான் ஏகாதிபத்தியங்கள் 'ஜனநாயகவாதி' எனப் புகழ்கின்றனர்.

## TV அறிவிப்பாளர்..

ஆயினும் அமெரிக்கர் தங்களை மேலாக நினைக்கும் எண்ணமும், அவர்கழின் பிழைபோகாத அரசியலும் அவர்களுக்கு கேடான பெறுபேறாக அமைந்தது. அவர்களின் உலக இராணுவ சர்வாதிகளுடான உறவு கொரூரமான பரிசுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. அவர்கள் கம்யூனிச எதிர்ப்பு என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தேசிய புரட்சிகளை சோவியத் ஆரவிற்கு இட்டுச் சென்றது.

www.tamilarangam.net

# பிலிப்பைன்ஸ் பற்றி

● TV அறிவிப்பாளர்

''பிலிப்பைன்ஸ் மக்கள் அமெரிக்கா மீதான நம்பிக்கையை இழந்தனர்: காரணம் என்னவெனில் அமெரிக்கா சர்வாதிகாரி மார்க்கோசைக் கண்டிக்காமையே. 4 அமெரிக்க ஜனாதிபதிகள் கொடுங்கோலன் மார்க்கோசை 'கம்யூனிச எதிர்ப்பு' என்ற போர்வையில் காத்து வந்தனர்.''

● RONALD SIMBULAN ( பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகம்)

'' 1972 ல் FERDINAND MARCOS ஆல் ஊரடங்குச் சட்டம் கொண்டு வரப்பட்டது. திட்டமிட்ட வகையில் எதிர்கட்சியினரும், மக்களும் சித்திரவதை செய்யப்பட்டனர். அமெரிக்காவினால் புகழப்பட்ட ஜனாதிபதி குரூரமாக நடந்தார். எனினும் அமெரிக்கா உதவிகளை அதிகமாக வழங்கியது.

மக்கள் அமெரிக்கா மீது சந்தேகம் கொள்ளத் தொடங்கினர். ஏனெனில் அமெரிக்கா ஜனநாயக அமைப்பையே ஆதரிக்குமென நம்பினர். 'ஜனநாயம்' என்ற சொல்லை அவர்கள் அமெரிக்காவிடமிருந்தே அறிந்தனர். ஏன் மார்க்கோசை அவர்கள் ஆதரிக்கின்றனர் எனக் கேட்கத் தொடங்கினர்.''

● TV அறிவிப்பாளர்

''1983ல் Nindoy aquino மார்க்கோசின் படைகளால் விமானநிலையத்தில் வைத்துச் சுடப்பட்டார். இவர் மார்க்கோசை எதிர்த்தவர். அமெரிக்காவிலிருந்து வந்த போதே சுடப்பட்டார்.''

● NIKKI COSTENG (பிலிப்பைன்ஸ் காங்கிரஸ் உறுப்பினர்)

''அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஜனநாயகக் கொள்கைகளைக் காப்பதாக கூறி மார்க்கோசை வாழ்த்தினார். அந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் சிறையிலும், சித்திவதை முகாம்களிலும் அடைக்கப்பட்டார்கள். காரணம்- அவர்கள் மார்க்கோசை எதிர்த்தமை யே ஆகும். ஆயிரக்கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் விசாரணை செய்யப்படவில்லை என்பதுடன், இன்னும் பலர் அடையாளம் இல்லாமலே யே மறைந்து போயினர். இவையாவையும் அமெரிக்க உதவியுடனேயே மார்க்கோசால் செய்ய முடிந்தது. அதனாலேயே அவர் 20 வருடங்கள் தொடர்ந்து ஆட்சியில் அமர முடிந்தது.''



George Bush

● முன்னாள் உதிவி ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்

''எங்கள் ஜனாதிபதியும், எங்கள் நாடும் பசிபிக்கடல் பிரதேசம் குறித்து கடமைப்பாடும், மிகப் பெரிய மதிப்பும் வைத்துள்ளோம். பிலிப்பைன்ஸ் மக்களிடம் மாத்திர மல்ல, மற்றைய Asean நாடுகள் மீதும் அவர்களது ஜனநாயக கொள்கைகளுக்கும், ஜனநாயக வளர்ச்சி மீதும் நம்பிக்கை வைத்துள்ளோம்.''

ஏகாதிபத்தியங்கள் இன்று ஜனநாயகம் பற்றி வாய்கிழியக் கத்துகின்றன. உண்மையில் இவர்கள் ஜனநாயகத்துக்கு எதிராகவே செயற்பட்டு வந்துள்ளனர் என்றதே வரலாறாக உள்ளது. மேற்கூறிய தகவல்கள் இவர்கள் செய்த குற்றங்களில் ஒரு துளி எனலாம். ஆனால் இன்று உலகுக்கு இவர்கள் **'வழி'** காட்டுகிறார்களாம், **தூ!**

● **தங்கரூபன்**

www.tamilarangam.net

# நவீன மால்தூஸ் வாதமும் தொழிலாளி வர்க்கமும்

பிரோகோவ், மருத்துவர்களின் (டாக்டர்களின்) காங்கிரஸில் குறைப்பிரசவம் பற்றி அதிக அக்கறை காட்டப்பட்டு நீண்ட விவாதம் நடைபெற்றது. இன்று நாகரீகமடைந்த நாடுகள் என்று சொல்லப்படுகிறவற்றில் கருவைச் சிதைக்கும் பழக்கம் மிக அதிக அளவு பரவலாக உள்ளது பற்றிய புள்ளி விவரங்களை லிச்கஸ் தமது அறிக்கையில் மேற்கோள் காட்டினார்.

நியூயார்க்கில் ஒரு வருடத்தில் 80,000 கருச்சிதைவுகள் செய்யப்பட்டன: பிரான்ஸில் மாதம் ஒன்றுக்கு எண்ணிக்கை 36,000: செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் கடந்த ஐந்து ஆண்டுகளில் கருச்சிதைவுகளின் விகிதம் இரு மடங்கிற்கும் அதிகமாகி யுள்ளது. செயற்கை கருச்சிதைவு செய்து கொள்வதற்காக எந்த தாய் மீதும் குற்ற வழக்குத் தொடரப் படக்கூடாது என்றும் அறுவை சிகிச்சை ''லாப நோக்கத்திற்காக'' செய்யப்பட்டால் டாக்டர்கள் மீதுதான் குற்ற வழக்கு தொடரப்பட வேண்டு மென்றும் பிரசோவ் டாக்டர்கள் காங்கிரஸ் ஒரு தீர்மானத்தை நிறை வேற்றியது.

விவாதத்தில் பெரும்பான்மையினர் கருச்சிதைவுகள் தண்டிக்கப்படக் கூடாது என்று ஒப்புக் கொண்டனர். நவீன மால்தூஸ் வாதம் (கருத்தடை முறைகள் உபயோகிப்பது) என்ற ழைக்கப்படுகிற பிரச்சினையும் - அதன் சமூக அம்சமும் இயல்பாகவே எழுப்பப்பட்டது. உதாரணமாக **ரூஸ் கோயி ஸ்லோவோ** வில் வெளியிடப்பட்ட செய்திப்படி ''கருத்தடை முறைகள் கட்டாயம் வரவேற்கப்படவேண்டும்'' என்று திரு. விக்டோர்சிக் குறிப்பிட்டார். பலத்த கரகோஷத்திற் கிடையே திரு. அஸ்ட்ரகான் கூச்சலிட்டார்.

> "கல்வி நிறுவனங்களில் (குழந்தைகள்) முடமாக்கப்படுவதற்காக, அவர்களுக்கு சீட்டு குலுக்கப்பட்டு தற்கொலைக்குத் தள்ளப்படுவதற்காக குழந்தைகளைப் பெறும்படி தாய்மார்களை நாம் நம்பவைக்க வேண்டும்!"

திரு. அஸ்ரகானின் இந்த வியப்புரையை மிகப்பலத்த கரகோஷத்திடையே வரவேற்கப்பட்டது என்ற செய்தி உண்மையானால், அது என்னை வியப்புக்குள்ளாக்கவில்லை. கூட்டத்தில் இருந்தவர்கள் பூர்ஷுவாக்கள், இடைத்தட்டு குட்டி பூர்ஷுவாக்கள்: இவர்கள் பண்பற்ற மனப்பான்மை உடையவர்கள். அற்பத்தனமான தாராளப் போக்கைத் தவிர வேறு எதை இவர்களிடம் எதிர்பார்க்க முடியும்?

தொழிலாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் மேலே குறிப்பிட்ட திரு. அஸ்ட்கானின் வாசகத்தை விட முழுவதும் பிற்போக்கான சமூக நவீன மால்தூஸ் வாதத்தின் மிக அசிங்கமான பிரதிபலிப்பை கண்டுபிடிப்பது கடினம். குழந்தைகளைப் பெறுங்கள் அவர்கள் முடமாக்கப்படுவதற்காக..... அதற்காகத்தானா? நமது தலைமுறையினரை முடமாக்கி நாசப்படுத்தி வரும் வாழ்க்கையின் இன்றைய நிலையை எதிர்த்து நாம் போராடுவதைவிட மேலும் சிறப்பாக மேலும் ஐக்கியத்துடனும் உணர்வு பூர்வமாகவும் உறுதியுடனும் அவர்கள் ஏன் போராடக்கூடாது.

விவசாயி, சிறு கைத்தொழில் செய்பவர், அறிவாளி, பொதுவாக குட்டி பூர்ஷுவாவின் உளப்பாங்கிற்கும் பாட்டாளியின் உளப்பாங்கிற்குமிடையேயுள்ள தீவிரமான வித்தியாசமாகும் இது. குட்டி பூர்ஷுவா தான் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதையும் வாழ்க்கை மேலும் கடினமாகி வருவதையும், வாழ்வதற்கான போராட்டம் மேலும் மேலும் கொடூரமடைந்து வருவதையும் அவனுடையதும் அவனது குடும்பத்தினுடையதுமான நிலை மேலும் மேலும் கதியற்றதாகி வருவதையும் பார்க்கின்றான்: உணர்கின்றான். இதை எதிர்த் துக் கண்டிக்கின்றான் குட்டி பூர்ஷுவா என்பது மறுக்க முடியாத உண்மை.



ஆனால் அவன் **எவ்வாறு** கண்டிக்கிறான்?

கதியில்லாமல் அழிந்து வரும் அதன் எதிர்காலம் பற்றி நம்பிக்கையற்ற, சோர்வும் கோழைத்தனமும் கொண்ட ஒரு வர்க்கத்தின் பிரதிநிதியாக அவன் கண்டிக்கிறான். செய்வதற்கு ஒன்றும் இல்லை..... நமது மனவேதனையை, கடுமையான உழைப்பை, நமது வறுமையை, நமது கேவலத்தை அனுபவிக்க குறைந்த எண்ணிக்கை யில் குழந்தைகள் இருந்திருக்கக் கூடாதா - இதுதான் குட்டி பூர்ஷுவா வின் அழுகுரல்.

வர்க்க பேதம்பெற்ற தொழிலாளியின் கண்ணோட்டம் இதற்கு முற்றிலும் மாறுபட்டது. இவ்வழுகுரல்கள் எவ்வளவு மனப்பூர்வமாகவும் உளமார்ந்ததாகவும் இருந்த போதிலும் அவற்றால் தன் உணர்வு மழுங்கடிக்கப்படுவதை அவன் அனுமதிக்க மாட்டான். ஆம், தொழிலாளர்களும் பெரும்பாலான சிறு உடமையாளர்களும் தாங்க முடியாத கொடுமையும் கஷ்டமும் நிறைந்த வாழ்க்கையை நடத்துகின்றனர். நமது தந்தைமார்களை விட நம் தலைமுறையினருக்கு வாழ்க்கை மேலும் கடினமாக உள்ளது. ஆனால் ஒரு விஷயத்தில் நமது தந்தைமார்களை விட நாம்

www.tamilarangam.net

அதிஷ்ட சாலிகள். **போராடுவதற் காக நாம் கற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டோம், வேகமாக கற்று வருகிறோம்.** ஆனால் தனி நபர்களாக போராடவல்ல - நமது தந்தைமார்களில் சிறந்தவர்கள் அப்படித்தான் போராடினார்கள்: உணர்வில் நமக்கு அன்னியமான பூர்ஷுவா பிரசங்கிகளின் கோஷங்களுக்காக அல்ல ஆனால் நமது கோஷங்களக்காக நமது வர்க்கத்தின் கோஷங்களக்காக போராட கற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டோம். நமது தந்தைமார்களை விட நன்றாக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். நமது குழந்தைகள் நம்மைவிட நன்றாகப் போராடுவர். **அவர்கள் வெற்றியும் பெறுவர்.**

தொழிலாளி வர்க்கம் அழிந்து கொண்டிருக்கவில்லை, அது வளர்ந்து கொண்டிருக்கிறது, மேலும் பலம் பெற்று, பக்குவம் பெற்று, தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கிறது: தானே போதனை பெற்று போராட்டங்களில் எ'கைப்போல் உறுதி பெற்று வருகிறது. பண்ணைஅடிமை, முதலாளித்துவம், சிறு உற்பத்தி பொறுத் தவரை நாம் நம்பிக்கையற்றவர்கள்: ஆனால் தொழிலாளி வர்க்கத்தையும் அதன் லட்சியங்களையும் பொறுத்தவரை நாம் நம்பிக்கைவாதிகள். நாம் ஏற்கனவே ஒரு புதிய மாளிகைக்கு அஸ்திவாரம் போட்டு வருகிறோம்: நமது புதல்வர்கள் அதன் நிர்மாணத்தை பூர்த்தி செய்வர்.

இதனால் தான் - இந்த ஒரே காரணத்தால் தான் - ''கடவுள் அருளால் எப்படியோ நாம் நம்மையே சமாளித்துக் கொள்கிறோம். நமக்கு குழந்தைகள் இல்லையென்றால் அந்த அளவிற்கு நல்லதாகப் போயிற்று'' என்று பீதிக் குரலில் மெதுவான குரலில், வெளியிடும் உணர்ச்சியற்ற அகம்பாவம் பிடித்த குட்டி - பூர்ஷுவா தம்பதிகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய நவீன - மால்தூஸ் விவாதத்திற்கு நிபந்தனையற்ற எதிரிகள் நாம்.

கருச்சிதைவுக்கு எதிரான அல்லது கருத்தடை முறைகள் பற்றி பிரசாரங்கள் வினியோகிப்பதற்கு எதிரான எல்லாச் சட்டங்களையும் நிபந்தனையின்றி ரத்து செய்யப்பட வேண்டுமென்று நாம் கோருவதிலிருந்து நமது மேற்சொன்ன நிலை நம்மை எந்தவிதத்திலும் தடுக்கவில்லை என்பதைக் கூறத் தேவையில்லை இத்தகைய சட்டங்களெல்லாம் ஆளும் வர்க்கங்களின் கபட நாடகமே. இந்தச் சட்டங்கள் முதலாளித்துவத்தின் புண்களை ஆற்றுவதில்லை: அவை ஆற்றமுடியாத புண்களாகவே மாறுகின்றன: இவை குறிப்பாக கொடுமைப் படுத்தப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு வேதனையாயுள்ளன. மருத்துவப் பிரசாரத்திற்கு சுதந்திரம், ஆண், பெண் பிரஜைகளின் சர்வசாதாரணமான ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பது - இவை ஒன்று: நவீன மால்தூஸ் வாதத்தின் சமூக தத்துவம் என்பது முற்றிலும் வேறு. அந்த பிற்போக்கு, கோழைத்தனமான தத்துவத் தை நவீன சமுதாயத்தின் மிகவும் அதிகம் முற்போக்கான, பலம் வாய்ந்த வர்க்கத்தின் மீது, மகத்தான மாற்றங் களுக்கு மிக அதிகம் தயாராக உள்ள வர்க்கத்தின் மீது திணிப்பதற்குமான முயற்சிகளுக்கு எதிராக மிகக் கடுமை யான போராட்டத்தை வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் எப்பொழுதும் நடத்துவர்.

எழுதப்பட்டது ஜுன் 6 (19), 1913
பிராவ்தா எண் 137 -ல், ஜுன் 16, 1913 -ல் பிரசுரிக்கப்பட்டது.
ஒப்பம்: வி. இ

நூல்திரட்டு
தொகுப்பு எண் 19,
பக். 235-237

## யாழை மீள......


5ம் பக்கத் தொடர்..

உதாரணமாக:- கொழும்பு செல்லும் தமிழ் மக்களுடன் தான் புலிகள் கொழும்புசெல்ல முடிகிறது. தமிழ் மக்கள் செல்லாவிட்டால் புலிகளும் செல்ல முடியாது. இதுபோன்றது தான் யாழ். க்கு மக்கள் சென்றால்தான் புலியும் செல்லமுடியும். இல்லாதவரை குடாநாட்டைக் கைவிடத்தான் முடியும்.

சொந்த மண்ணை முத்தமிடவும், வாழ அனுமதிக்காத நிகழ்வும் தொடருமாயின் மக்கள் மண்பற்றை இழந்து போவார்கள். எங்கள் மண் என்ற உணர்வை, ஆக்கிரமிப்பாளனை எதிர்க்கும் சொந்த மண் இன உணர்வை இழந்து அந்நியப்பட்டுப் போகும் நிகழ்ச்சிக்கு புலிகளின் அண்மைய கொள்கைகள் இட்டுச் சென்றுவிடும். மண்ணுக்குத் திரும்பிச் செல்ல விடாது தடுப்பது, வடமாராட்சி, தென்மராட்சி மக்களை வெளியேறக் கோருவது, மக்கள் எங்கள் மண்ணென்று போராடும்போது அடக்குவது தேசவிடுதலைப் போராட்டத்திற்கு எதிரானது. இது சிங்கள் இனவெறி அரசுக்கு செய்யும் சேவகமாகும். அவர்கள் தமிழ் மக்களின் மண் உணர்வை புலிகளே இல்லாமல் பண்ணுவதையிட்டு மகிழ்ச்சிக் கடலில் உள்ளனர்.

யாழ் குடாநாட்டில் தமிழ் மக்களை வாழ அனுமதிக்காவிட்டால் எதிர்காலத்தில் யாழ் குடாநாட்டில் சிங்களக் குடியேற்றம் நடக்கலாம். அது முதலில் முன்பு புலம்பெயர்ந்த சிங்களவர் பின் விகாரைக்கரையைச் சுற்றியும் அமையும். பின் இராணுவம் தன் குடும்பத்துடன் குடியேற முயலலாம். இது பரவலாக நிகழ வாய்ப்புக்கள் உண்டு.

எந்த சிங்கள இனவாதியும் எங்கள் மண்ணென மீள மீளக் கூறுவதும், திட்டமிட்டே தமிழ் மண்ணில் குடியேறுவதும் புலிகளின் இன்றைய செயலுக்கு எதிரானதாக வுள்ளது. மண்பற்றுடன் சொந்த இடத்தை விடாமல் நிற்பவனை பாது காப்பதற்குப் பதில் வெளி யேறு எனக் கோருவதும், தமிழ் தேசிய இன அழிப்புக்கு சுயநிர்ணய இழப்புக்கும் இட்டு செல்லும். எங்களின் சொந்த வாழ்விடம் என்ற எண்ணத் துடன் மீளக் குடியேறும் அனைத்து முயற்சிக்கு புலி கள் ஒத்துவர வேண்டும். அது மட்டுமே தேசப் பற்றை ஏற்படுத்தும். அது மட்டுமே சொந்த வாழ்விடத்தை பாதுகாக்கும் போராட்டமாக வெடிக்கும்.



## 25 ஆயிரம் சீக்கியரைக் கொன்ற இந்தியா அரசு

பஞ்சாப்பில்
பயங்கரவாதிகளை
ஒடுக்குவது என்ற பெயரால்
இந்திய ஜனநாயக அரசு
கடந்த பத்து வருடத்தில்
25,000 அப்பாவிகளை
கொன்றொழித்துள்ளது. ஒரு
நாளைக்கு 7 பேர் வீதம்
பஞ்சாப்பில் பொலீஸ்
கொன்று தனது அரக்கத்
தனத்தை புரிந்துள்ளது.
இதை தேச ஒற்றுமை என்றும்
பிரிவினை சக்திகளை ஒழிக்க
வென்றும் கூறியே அப்பாவி
மக்கள் வேட்டையாடப்
படுகின்றனர். அப்பாவி சீக்கிய
பெண்களை கும்பல்
கும்பலாக கற்பழித்து,
சொத்துக்களை சூறையாடி,
பயிர் பச்சைகளை நாசம்
செய்து, மிரட்டிப்
பணம்பறித்து,
இளையோர்களை
சித்திரவதை செய்து,
இரகசியமாக சுட்டுக் கொன்று
மோதலில் இறந்ததாக
பசாங்கு காட்டி எண்ணற்ற
சட்டவிரோத, மக்கள் விரோத
காட்டுத்தார்பாரை பஞ்சாப்பில்
நடத்தியது தற்போது
அம்பலமாகியுள்ளது.

www.tamilarangam.net




விடுதலைப் புலிகளால் நடாத்தப்படும் உத்தியோக பூர்வமற்ற பத்திரிகையான 'ஈழமுரசு' கடந்த ஜனவரி 4.10 -96 ல் குறிப்பிடத்தக்க செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. புலிகளின் வரலாற்றில், புலிசார்பு வெளியீடுகளில் மாற்றுக் கருத்துப் பற்றிய ஒரு செய்தியினை தொடர்ச்சியாக வெளியாக்கும் நண்டுப் பகுதியில் கொண்டிருந்தது.

அதை அப்படியே உங்கள் பார்வைக்குப் பிரசுரிக்கின்றோம்.

''கடந்த ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் வெளிவந்த 'சரிநிகர்' பத்திரிகையை படித்தபோது, சிறீலங்கா அரசின் இன அழிப்பு முயற்சிக்கு எதிரான காத்திரமான கண்டனங்கள் அப் பத்திரிகையில் வெளியாகி இருந்தமையை காண முடிந்தது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் 'சரிநிகர்' விமர்சன ரீதியிலான ஆக்கபூர்வமான பங்கு வகிக்குமென அப்பத்திரிகையுடன் தொடர்புள்ளவர்கள் கூறிக்கொள்வதில் உண்மை உண்டு என்ற எண்ணத்தினையும் இது ஏற்படுத்தியது.

ஆனால் 'மேர்ஜி' என்ற அமைப்புக்குள் நின்று வெளிவரும் பத்திரிகையினால் இதனை நீண்டகாலம் வெல்ல முடியுமா என்ற கேள்வியும் எழும்பக்கூடியதான சில தகவல்களும் நண்டாரின் காதில் வீழ்ந்தன.

முன்னர் ஒரு தடவை 'சரிநிகர் விடுதலைப் புலிகள் ஆதரவுப் பத்திரிகையா?' என ஒரு குறிப்பினை நண்டார் எழுதியிருந்தார்.

தற்போது, 'சரிநிகர்' விடுதலைப் புலிகளின் பத்திரிகையாகச் செயற்படுகின்றது எனவும் அப்பத்திரிகை நிறுத்தப்பட வேண்டும் எனவும் 'அரச சார்புத் தமிழ் புத்திஜீவிகள்' 'மேர்ஜி' அமைப்புக்கு அழுத்தம் கொடுத்துள்ளாராம். இதேவேளை இப்பத்திரிகை நிறுத்தப்படக் கூடாதென சில எழுத்தாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

உண்மையில், 'சரிநிகர் விடுதலைப் புலிகளின் ஆதரவுப் பத்திரிகை' என முத்திரை குத்தப்படுவது, அரசின் கொடுரங்களைக் கண்டித்து, ஏமாற்றுதல்களை அம்பலப்படுத்துவதாலா? அல்லது தமிழர் தேசியம் என்னும் கருத்தை 'சரிநிகர்' முன்வைப்பதைத் தடுப்பதற்காகவா? அல்லது இவை இரண்டுக்குமாகவா? தமிழருடைய சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசுபவர்கள் எல்லாம் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்றால், சரிநிகரும் விடுதலைப் புலிகளின் ஆதரவுப் பத்திரிகை என முத்திரை குத்தப்படுவது தவிர்க்க முடியாதது. இம் முத்திரையினைத் தவிர்பதற்காக விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் சம அளவில் கண்டனங்களை வைக்க எண்ணாது, தமிழர் உரிமைப் போராட்டத்தினை உறுதியாக ஆதரித்து 'சரிநிகர்' எழுத வேண்டும். பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிடுவதற்காக சமரசங்களைச் செய்யாமல் 'சரிநிகர்' ஆசிரியர் குழு இயங்குமா?''

-நண்டு-
4-10,1-1996
-ஈழமுரசு-

ஆம், முதன் முதலில் புலிகள் மாபெரும் நெருக்கடியை முகம் கொடுக்கின்றனர். தமிழ் தேசிய இனம் சூறையாடப்பட்டு கற்பழிக்கப்பட்டு, சின்னாபின்னப்படும் இன்றைய நிலையில்தான் புலிசார்பு ஈழமுரசில் சரிநிகர் பற்றிய ஒரு குறிப்பு வந்துள்ளது. வரலாற்றில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான சுயநிர்ணய உரிமைக்கான போரில் உறுதிகுலையாது போராடியவர்கள் பலர். அதில் சரிநிகரில் உள்ளவர்களில் சிலருமாவர். அவர்கள் கடந்த வரலாற்றிலும்,

www.tamilarangam.net

நிகழ் வரலாற்றிலும் சுயநிர்ணய உரிமைக்காக குரல்கொடுத்த வண்ணமே உள்ளனர். ஆனால், இவர்களையெல்லாம் மண்ணைவிட்டுத் துரத்தியது யார்? இவர்களக்கு மரணதண்டனையே கைகளில் பிடிபட்டால் என மிரட்டிக்கொண்டிருப்பவர்கள் யார்?


ஆம், இன்று இதே ஈழமுரசில் எழுதும் புலிகளே. சரிநிகரில் எழுதுபவர்கள் போல் இன்னும் எத்தனையோ பேரை கொன்றீர்கள், சிறைவைத்துள்ளீர்கள், நாட்டைவிட்டு ஓடவைத்துள்ளீர்கள். ஆம், இன்னமும் நேரம் கடந்துவிடவில்லை. சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் அனைவரையும் அங்கீகரியுங்கள். இருகைகொடுத்து அணைத்துக் கொள்ளுங்கள். கணவன்-மனைவிக் கிடையிலுள்ள பரஸ்பர உறவுக்குள் இட்டுச்செல்லுங்கள். ஒன்றாக வாழ போராட ஆணாதிக்கத்தை விட்டு சமவுரிமையை அங்கீகரியுங்கள்.

எப்பொழுதும் புலிகளுக்கு எதிராக எழுத முயலவேண்டாம் என்ற உங்களின் நிலையையிட்டு நாம் புரிந்துகொள்ளவும், நட்புடன் விமர்சிக்கவும் தயாராகவுள்ளோம். ஆனால் அவை பரஸ்பர ஜனநாயகத்தை வழங்குவதன் மூலமேயாகும். மக்களின் பரிபூரனமான சுதந்திரதிராமான செயல்களில்தான் இது சாத்தியமானது.

நாம் எழுதுபவை எவையும் அபாண்டமான, அப்பட்டமான பொய்களாக இருப்பின் அதைச் சுட்டிக்காட்ட முடியும். நாம் அப்படி எழுதி பிழைப்பு நடத்துபவர்கள் அல்லர். நீங்கள் செய்ததை, சொன்னதை மட்டுமே நாம் சுட்டிக்காட்டி வரகிறோம். அது சுயநிர்ணயம் என்ற அச்சாணிக்கு பாதகமாக அமையாத வண்ணம், அதன்மீதான உறுதியான ஓர் அடிப்படையில் நின்றே குரல்கொடுத்து வந்துள்ளோம்.

நீங்கள் செய்த முஸ்லீம் மக்களை வெளியேற்றல், சுயநிர்ணயப் போராளிகளைக் கைதுசெய்தல், சிங்கள அப்பாவி மக்களைத் தாக்குதல்.... என்ற எண்ணற்றவிடயம் எங்களது கற்பனைகளல்ல. உங்கள் யதார்த்தம். அது மக்கள் விரோதம் என்பதால்தான் மக்கள் முன் உங்களால் முகம்கொடுக்க முடியவில்லை.அதனால்தான் அது புலிகளக்கு எதிரானது எனக் கூறுகின்றீர்கள். இந்த எதிர்ப்பும் பின் மக்கள் விரோதமாகச் சென்று முகம்கொடுக்க முடியாத நிலைக்குள் உங்களை இட்டுச் செல்கின்றது. இதைச் செய்யாமல் விடின் நாம் உங்களை ஆதரிப்போமே ஒழிய இதை எதிர்த்து எடுதமாட்டோம்.

ஆம், சுயநிர்ணயத்துக்காகப் போராடும் போராளிகளை உறுதியாக ஆதரியுங்கள், அரவணையுங்கள். மக்கள்விரோதச் செயல்களை நிறுத்துங்கள். ஒரு விடுதலைப்போராட்ட அமைப்பாக உங்களை மாற்றுங்கள். அதற்குத்தேவை சுயவிமர்சனம். அதைவிடுத்து நெருக்கடி ஏற்படும்போது மட்டும் சரிநிகரைப் பற்றி அபிப்பிராயம் கூறுவதல்ல. மாறாக அதை அரசியல் ரீதியானதாக மாற்றுங்கள். அதுமட்டுமே சுயநிர்ணயப்போரை வெற்றிக்கு ஈட்டிச்செல்லும் ●



# சமாதானத்தின் நடிகன் ராபின் சொந்த இனவாதத்தால் கொல்லப்பட்டான்

ராபின் கொல்லப்பட்டான். அதுவும் ராபி னால் வளர்க்கப்பட்டவர்களால் என்றால், இது வரலாற்றில் முதற் சம்பவமல்ல. பலநூறு சம்பவங்கள் இருந்தபோதும் - இந்திராகாந்தியைக் கொன்ற சீக்கியர்களும், ராஜீவ்காந்தியைக் கொன்ற புலிகளும் அடிப்படையில் ) அவர்களை வளர்த்து தீனிபோட்டவர்களே கொன்றொழித் தனர்.

ராபின் சென்றபின் உலக ஏகாதிபத்தியங் கள் மணிக்கணக்காக ஒப்பாரி வைத்தழுதன. ஆளும் வர்க்கத்தின் செல்லப்பிள்ளைகளின் கண்ணீரை மணிக்கணக்காக காட்டி ராபின் ஒரு தியாகி, மனிதநேயம் கொண்டவர், ஜனநாயகத்தின் காவலன், சமாதானத்தின் புறா, எனப் பலவாகப் புகழ்ந்து தள்ளியும், ஒப்பாரி வைத்தும் உலகெங்கும் ஆளும் பீடத்திலுள்ள யூதர்களின் மீதான விசுவாசத்தை நிறுவியுள்ளனர்.

இந்த ராபின் பாலஸ்தீன மக்களின் சொந்தமண்ணை விட்டு ஓடவைத்த ஓர் இனவாதி மட்டுமல்ல ஓர் இராணுவ அதிகாரியுமாவான். சொந்த மக்களை ஏமாற்றி பாலஸ்தீனம் பற்றி ஓர் இழிவான பிரச்சாரத்தைச் செய்து, பாலஸ்தீனம் மட்டுமின்றி, பக்கத்து நாடுகளையும் ஆக்கிரமித்து அதன்மீது ஒரு சர்வாதிகார ஆட்சியை நிறுவியவர். இதன்மூலம் பல ஆயிரம் மக்களைக் கொன்று போட்டதுடன், அமெரிக்காவின் மத்தியகிழக்கு செல்லப் பிள்ளையாக இருந்ததுடன், மத்திய கிழக்கில் பேட்டை ரவுடியாக இஸ்ரேலை உருவாக்கியவர்.

இப்படியாக உருவாக்கியவன் இன்று சமாதான நாடகம் என்பது, சந்திரிக்காவின் நாடகத்துக்கு ஒப்பிட முடியும். பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு துரோகமி ழைத்த யசிர் அராபாத்தை துணைக்கழைத்து, பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை விபச்சாரம் செய்து அதன் மீது தனது ஆதிக்க இஸ்ரவேல் கொடியை இன்று நிறுவியவன் தான் இந்த ராபின்.

அமெரிக்காவில் எழுந்துவந்த பொருளாதார நெருக்கடியும், சோவியத்தின் வீழ்சியும் இந்த சமாதாணத்தை ஏற்படுத்துவது அமெரிக்காவுக்குத் தேவையாக இருந்தது. அந்த நாடகத்தில் ராபின் ஒரு முக்கிய பாத்திரம்.

ராபினின் இனவாதத்தில் வளர்ந்த தீவிர இனவாதிகள் ராபினின் நாடக பாத்திரத்தின் முழுமையைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் தான், ராபின் மீது வேட்டுகள் தீர்ந்தன.

இதன் மூலம் பாலஸ்தீன மக்களின் அற்ப உரிமையைக் கூட இனவாதிகள் வழங்கமாட் டார்கள் என்பதை இந்த நிகழ்வு பாலஸ்தீன மக்களுக்கு மட்டுமன்றி உலகிலுள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்க ளுக்கும் சுட்டிக்காட்டுகிறது.

www.tamilarangam.net

# மார்க்சிசம் என்பதை மார்க்ஸ் பொது அடிப்படை உண்மைகளைக் கொண்டே நிறுவினார்


Karl Marx

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டப் பாதை இன்று முடக்கப்பட்டநிலையில், அதன் தேகத்தையும் சீரழிவையும் பயன்படுத்தி மார்க்சிசவிரோத திரிபுப் பாதையை சிலர் முன்தள்ளி வருகின்றனர்.

இந்த மார்க்சிசவிரோத திரிபுவாதத்தை முன்தள்ளுபவர்கள் எதிர்விமர்சனத்துக்குப் பதிலளிக்கத் தவறி எதிர் தரப்பை வரட்டுவாதிகள், குறுங்குழுவாதிகள். பழைமைவாதிகள், மார்க்சிசத்தை பூசையறைப்படம் ஆக்குபவர்கள் என்றும், வேறுபல சொற்தொடர்கள் மூலமாகவும் தாக்கிவருகின்றார்கள். இத்தாக்குதலை நடத்துபவர்கள் மார்க்சிச அடிப்படை பொது உண்மைகளை மாற்றிவிடத் துடிக்கின்றனர். மார்க்சிசம் கோட்பாட்டு ரீதியில் நிறுவப்பட்ட காலம் முதல், திரிபுவாதிகள் எந்தவகையில் தாக்குதலைத் தொடுத்தார்களோ, அதேவழியில் இன்றும் தொடர்வது மார்க்சியத்தில் மீளமீள நிகழ்கின்ற ஓர் உண்மையாகும்.

இந்தவகையில் இக்கட்டுரை எப்படி மார்க்சிசத் திரிபுகள், எந்தச் சொற்தொடர்கள் மூலம் கடந்த காலங்களில் மார்க்சிச விரோதக் கோட்பாட்டை மீள அமைத்துக்கொள்ள முனைந்தது என்பதை வாசகர்கள் சுயமாகப் புரிந்துகொள்ள, பல்வேறு மேற்கோள்களை உள்ளடக்கியதே இச் சிறுகட்டுரையாகும்.

ஒரு பிரச்சனையின் மீது அனைத்தும் தழுவிய பிரச்சனையை ஆராய மறுப்பதும், பிரச்சனையின் குவியமையம் இதுதான் என ஒன்றைக் கூறி, இந்த உலகஒழுங்குக்குள் தீர்வை நகர்த்தவும் சில திரிபுவாதிகள் முனைந்துள்ளனர்.

முதலில் மார்க்சிசம் சில அடிப்படை உண்மைகளை சார்ந்து உள்ளது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். பொது உண்மைகளை நிராகரித்து விடும் எவையும் மாாக்சிசம் அல்ல. மார்க்சிசம் என்பது மார்க்சின் பெயரால் அழைப்பட்டது எனின்: மார்க்சினால் எது பொது உண்மைகள் என நிறுவி ஏற்றுக் கொள்ளப்பட்டவையோ, அவற்றை நிராகரித்து விடும் எவையும் மாாக்சிசமே அல்ல. மார்க்சின் பெயரால் தான் இக்கோட்பாடு அழைக்கப்பட வேணுமென எங்கெல்ஸ் கூறிய போது மார்க்சின் பொது உண்மைகளின் அடிப்படையில், அதை மாாக்சே உருக்கினார் என்பதாலுமேயாகும்.

இன்று உயிர்ப்பு, மனிதத்தின் சில எழுத்தாளர்கள், நிறப்பிரிகை (அ.மாக்ஸ் உட்பட) மார்க்சிசத்துக்கு திருத்தல் கொடுக்க முனைகின்றனர். மார்க்சிசத்தின் பொது உண்மைகளைத் திருத்திவிட முனையும் இவர்கள், தங்களை மாாக்சியவாதிகள் என்று வேறு பிரகடனமும் செய்கின்றனர்.

மார்க்சின் பெயரால் உருவான பொது உண்மைகளான மார்க்சிசத்தை நிராகரித்த இவர்கள், தங்கள் கருத்துக்களை வேறுபெயர்களில் தான் அழைப்பது நியாயம். அது தான் ஒரு நேர்மையிருக்கான தகுதியும் கூட. அதைவிட்டுவிட்டு 'மார்க்சிசமும் தேசியமும்' என்ற புத்தகத்தில் சிவசேகரத்தை உயிருடன்வைத்துத் திருத்தியவர்கள், மார்க்சை திருத்த முயல்வது என்பதை, அதன் அரசியல் நோக்கில் ஒப்பிட்டே புரிந்துகொள்ள முடியும். ஏன் மார்க்சின் பெயரில் தான் மார்க்சிசத்தை அழைக்க வேண்டுமென எங்கெல்ஸ் கூறினாரோ அதன் ஆழ்ந்த அர்த்தத்தை அவரின் வாத்தைகளில் தான்

www.tamilarangam.net

புரிந்துகொள்ளவும் முடியும்.

''இங்கே சொந்தமுறையில் ஒரு விளக்கமளிப்பதற்காக என்னை அனுமதிக்க வேண்டும். சமீப காலத்தில் இந்தத் தத்துவத்தில் என்னுடைய பங்கைப்பற்றி அடிக்கடி பேசபட்டு வருகின்றது. எனவே இந்த விசயத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நான் இங்கே சில வார்த்தைகளை எடுத்தாராயாமல் இருக்க முடியாது. நாற்பது ஆண்டுகளாக எனக்கும் மார்க்சுக்கும் ஏற்பட்டிருந்த ஒத்துழைப்புக்கு முன்னரும் அதன் போதும் இந்த தத்துவஞானத்தின் அடிப்படைகளைத் தயாரிப்பதில் - குறிப்பாக, அதை விபரிப்பதில் எனக்கு சற்று சுதந்திரமான பங்கு இருந்தது என்பதை நான் மறுக்க முடியாது. ஆனால் அதை தலைமையான அடிப்படைக் கருத்துக்களில் - சிறப்பாக பொருளாதார மற்றும் வரலாற்றுத் துறைகளில் - மிகவும் பெரும் பகுதியும் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றை முடிவாக, துல்லியமாக வகுத்தளித்ததும் மார்க்சின் பங்காகும்... என்னுடைய பங்கினை நான் இல்லாமலேயே மார்க்ஸ் செய்திருக்க முடியும். ஆனால் மார்க்ஸ் சாதித்ததை நான் ஒருபோதும் செய்திருக்க முடியாது..... மார்க்ஸ் ஒரு மேதை. மற்றவர்களாகிய நாங்கள் - எவ்வளவு உயர்வாக மதிப்பிட்டாலும் - திறமைசாலிகளே. அவர்மட்டும் இல்லையென்றால்: இந்தத் தத்துவம் இன்று அடைந்திருக்கும் நிலையைச் சிறிதும் எட்டியிருக்காது. ஆகவே அது அவருடைய பெயரைத் தாங்கியிருப்பது பொருத்தமே.'' (அடிக்கோடு நாம்)

-எங்கெல்ஸ்-
-லுட்விக்.'.பாயர்பாஷ'ம் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்.-

இன்று மனிதத்தின் சில எழுத்தாளர்கள், உயிர்ப்பு, நிறப்பிரிகை (அ.மார்க்ஸ் உட்பட) போன்ற மார்க்சிச விரோதிகள், மார்க்சின் பெயரால் உள்ள மார்க்சிசத்திற்கு, மார்க்சுக்குத் திருத்தல் கொடுக்க முனைவதன் மூலம் தமது பூர்சுவாவர்க்க நிலைப்பாட்டை நிலைநிறுத்த முனைகின்றனர். மாபெரும் மேதையாக உருவான எங்கெல்ஸ் எவ்வளவு தூரம் தன்னை அதிலிருந்து விலக்கி, மாக்சின் முதன்மைப் பணியை அங்கீகரித்து, மார்க்சிச அடிப்படைகளை வகுத்தது மார்க்ஸ்தான் எனக் கூறி மார்க்சின் பெயரால் அத்தத்துவத்திற்கு மார்க்சிஸம் எனப் பெயரிட்டார்.

இன்று திரிபுவாதிகள் மார்க்சின் மார்க்சிசமான அடிப்படைப் பொது உண்மைகளை திருத்த முனைகின்றனர். உதாரணமாக:-

1 அடிக்கட்டுமானம், மேல்கட்டுமானங்களுக்கு இடையிலுள்ள உறவை மறுக்கின்றனர். அத்துடன் இரண்டும் ஒன்றுதான் என்கின்றனர்.

2 வர்க்கப் பார்வையின்றி சிந்தனை இருக்கமுடியும் என்கின்றனர். அதாவது 1,தேசியம் 2,அரசு 3,பெண்ணியம் 4,சாதியம் 5,அழகியல் 6,கலை இலக்கியம்......

3 அழகியல் இசை போன்றன வர்க்கப் பார்வையின்றி இயங்கமுடியும் என்கின்றனர். அது சுயாதீனமான தனித்துவமான விதிகளைக் கொண்டு இயங்கும் என்கின்றனர்.

4 பருப்பொருள் இன்றி சிந்தனை இருக்கமுடியும் என்கின்றனர்.

5 புரட்சிக்குப் பின் சமுதாயத்தில் வர்க்க முரண்பாடு இருக்க முடியாது என்கின்றனர். சோவியத், சீனாவில் முதலாளித்துவ மீட்சி ஏற்படவில்லை என்கின்றனர்.

6 சோசலிச சமுதாயத்தின் பின்னுள்ள இயங்கியலை நிராகரிக்கின்றனர். ஒரு பிரச்சனை திடீர் திடீரென மாறிவிட்டதென கற்பனையுடன் கூறியும், அதிலிருந்து மாாக்சிசத்திற்கு சேறடிக்கின்றனர்.

இப்படிப்பல மார்க்சிச அடிப்படை உண்மைகளையும், அது சார்ந்த உண்மைகளையும் நிராகரித்து மார்க்சுக்கு திருத்தம் கொடுக்கின்றனர். மார்க்சின் பெயரால் மாாக்சிசம் உள்ளவரை, மார்க்சுக்குத் திருத்தம் கொடுப்பவர்களின் தத்துவம் மாாக்சிசம் அல்ல என்பதை எந்த வாசகரும் முதலில் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இப்படி மார்க்சுக்கு திருத்தம் கொடுப்பவர்களும் திரிபுவாதிகள் ஆகின்றனர். இதையே நாம் கடந்த காலங்களில் சுட்டிக்காட்டி வந்தோம்.

இதுபோன்று பல மாாக்சிய அடிப்படைகளை நிராகரிக்கும் போக்கில் மனிதத்தின் சில எழுத்தாளர்கள், உயிர்பு, நிறப்பிரிகை போன்றோர் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தம்மை மார்க்சிசவாதிகள் என வேறு பிரகடனம் செய்தபடி, மார்க்சியத்துக்கு திருத்தம் கூறுகின்றனர். மார்க்சிய வரலாற்றில் இது எப்பொழுதும் நிகழ்ந்த வண்ணமே உள்ளது. நாம் இன்று இதை எதிர்கொள்வது போல், அன்று லெனினுக்கும் ஏற்பட்டதே. அதை லெனின் 1910 இல்..

''மார்க்சியம் உயிரற்ற வரட்டுச் சூத்திரம் அல்ல: இறுதி முடிவாக்கப்பட்டு விட்ட, முன்கூட்டியே தயார்செய்து வைக்கப்பட்டு விட்ட: மாற்றத்திற்கு இடமில்லாதவாறு இறுகிவிட்ட போதனை அல்ல அது. செயலுக்கான உயிருள்ள வழிகாட்டி அது: சமுதாய வாழ்க்கை நிலைமைகளில் ஆச்சரியப்படத்தக்க திருதிருப்பென நிகழ்ந்த மாறுதல்களை இக்காரணத்தால் நிச்சயமாய் மார்க்சியம் பிரதிபலித்து காட்டவே செய்யும். ஆழ்ந்த சிதைவிலும், ஒற்றுமையின்மையிலும், பல வகைப்பட்ட ஊசலாட்டங்களிலும், சுருங்கச் சொன்னால் மார்க்சிசத்துக்கு உள்ளேயே ஒரு மிகத் தீவிரமான நெருக்கடியிலும் இந்த மாறுதல் பிரதிபலித்துக் காட்டப்பட்டது. இந்த சிதைவை எதிர்த்து மூர்தன்னியமாகப் போராடவேண்டிய தேவை, மார்க்சிசத்தின் அடிப்படைகளுக்காக மூர்தன்னியமான, விடாப்பிடியான போராட்டத்தை நடாத்த வேண்டிய தேவை, மறுபடியும் நிகழ்ச்சி நிரலுக்கு வந்தது. இதற்கு முந்திய காலப்பகுதியில் வர்க்கங்களின் மிகவும் விரிவான பகுதியோர் தமது குறிக்கோள்களை வகுத்துக் கொள்ளவும் மார்க்சிசத்தை தவிர்த்து விலக்க முடியாமற் போகவே, இந்தப் போதனையை அவர்கள் அளவுமீறி ஒருதலைப் பட்சமாகவும் திரித்துக் குலைக்கப்பட்ட பாணியிலும் சிரசித்துக் கொண்டனர். குருட்டுப் பாடமாய் சிற்சில ''கோரங்களையும்'' போர்த்தந்திரப் பிரச்சனைகளுக்கான சிற்சில விடயங்களையும் - இந்த விடயங்களுக்கான மார்க்சிய அடிநிலைக் கூறுகளை புரிந்துகொள்ளாமலே - நெட்டுரு போட்டு வைத்தனர். சமுதாய வாழ்வின் பல்வேறு துறைகளிலும் ''எல்லாப் பண்பு மதிப்புக்களையும் மறுபடியும் மதிப்பீடு செய்ய'' நேர்ந்ததைத் தொடர்ந்து மாாக்சியத்தின் மிகவும் கருத்தியலான. பொதுப்படையான தத்துவவியல் அடிப்படைகள் ''திருத்தப்பட்டுவிடும்'' ஒரு நிலை ஏற்பட்டது.''

(அடிக்கோடு லெனின்)
-மார்க்சியத்தின் வரலாற்றவளாச்சியில் சில சிறப்பியல்புகள்-

லெனின் அன்று நாம் இன்று எதிர்கொள்ளும் பிரச்சனைபோன்ற எதிர் நோக்கினர். இன்று மாாக்சிய திரிபுகளும், அன்று எதைச் சொன்னார்களோ, அதே சொல்லங்காரத்தையே பயன்படுத்துகின்றனர். மார்க்சியம் இறுகியதும் அல்ல, நிலைமைகள் மாறிவிட்டன, சில அடிபபடைகளை அதன் இயங்கியலையும் நிராகரித்து கோசங்களில் இருந்து விவாதிப்பது, போன்றவற்றை மனிதத்தில் சில எழுத்தாளாகள், உயிர்ப்பு, நிறப்பிரிகையும் வேறுசிலரும் இன்று தமிழில் செய்துவருகின்றனர்.

இவர்களின் வாதங்களை நாம் தகர்த்து எறிய, இவாகள் எந்த மார்க்சிசத்தை திருத்த முனைகின்றாாகளோ, அதன் அடிப்படைக் கோட்பட்டின் மீதான மேற்கோளை பயன்படுத்துவதைக் கண்டு அலறுகின்றனர். இது மேற்கோள் யுத்தம், மேற்கோளை விட்டால் வேறுஒன்றும் இதில் இல்லை, புதிய நிலைமைகளை மதிப்பிட இது போதாது போன்ற அடுக்கடுக்கான சொற்தொடர்கள் ஊடாக தமது திருபுவாதத்தை நியாயப்படுத்த திரித்துப்புரட்டுகின்றனர். இதை நாம் மட்டுமல்ல லெனின் கூட அன்று எதிர்கொண்டார். மாாக்சிய வரலாறு, அதன் மீதான திரிபுவாதமும் ஒரேபோக்கில் அதே சொற்தொடருடன் மீளமீள வருவதற்கு லெனினின் இக் கருத்து சான்றாகும்.

''மார்க்சிசத்தின் போதனைக்கு தற்போது

www.tamilarangam.net

என்ன நேர்ந்து வருகின்றதோ அதுவே தான் விடுதலைக்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய புரட்சிகரச் சிந்தனையாளர்களும் தலைவர்களுமானோரின் போதனைகளுக்கு வரலாற்றில் அடிக்கடி நிகழ்ந்துள்ளது.... அவர்களை அபாயமற்ற பூசையறைப் படங்களுக்குரியோராக்கவும், ஓரளவு அவர்களுடைய பெயர்களைப் புனிதத் திருப்பெயர்களாகவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை ''ஆத்ம திருப்தி'' பெறச் செய்வதும், அவற்றை ஏமாற்றுவதும், அதேபோதில் புரட்சிப் போதனையிடமிருந்து அதன் சாரப்பொருட்களைக் களைந்து, அதன் புரட்சி முனையை மழுங்கடித்து, அதைக் கொச்சைப்படுத்துவதும் தான் இந்த முயற்சியின் நோக்கம். முதலாளித்துவ வர்க்கத்தாரும் தொழிலாளர் இயக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதிகளும் இன்று மார்க்சியத்தை இவ்வாறு ''பதனம் செய்வதில்'' ஒன்றுபடுகின்றனர். இந்தப் போதனையின் புரட்சித் தன்மையை, இதன் புரட்சி ஆன்மாவை அவர்கள் விட்டொழிக்கவோ, மூடிமறைக்கவோ, திருத்திப் புரட்டவோ செய்கின்றார்கள். முதலாளித்துவ வர்க்கத்திற்கு ஏற்புடையதை, அல்லது ஏற்புடையதாய்த் தேன்றுவதை முதன்மையாய் முன்சரிநிலைக்குக் கொண்டுவந்து மெச்சிப் புகழ்கின்றார்கள்...

மாக்சிசத்தைத் திரித்துப் புரட்டுவது என்றுமில்லாத அளவிற்கு மலிந்திருக்கும் இப்படிப்பட்ட நிலையில், மெய்யாகவே மார்க்ஸ் அரசு என்னும் பொருள் குறித்து என்ன போதித்தார் என்பதை திரும்பவும் நிலைநாட்டுவதே நமது தலையாய கடமை. இதற்கு நேரடியாக மாக்ஸ், எங்கெல்ஸ் நூல்களிலிருந்து நீண்ட பல மேற்கோள்கள் தருவது இன்றியமையாதது. நீண்ட மேற்கோள்கள் வாசகத்தைக் கடினமாக்கிவிடும், சுவையாகவும் எளிதாகவும் பலரும் படிக்கத்தக்க வாசகமாக்குவதற்கு தடையாகிவிடும் என்பது மெய்தான். ஆயினும் இம் மேற்கோள்களைத் தவிர்ப்பது சாத்தியமன்று. மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்களில் அரசு என்னும் பொருள் குறித்துக் காணப்படும் எல்லாப் பகுதிகளையும், அல்லது அத்தியாவசியமான எல்லாப் பகுதிகளையேனும் கூடுமானவரை முழு அளவில் எப்படியும் மேற்கோளாய் கொடுக்கவேண்டும். அப்பொழுது தான் விஞ்ஞான சோசலிசத்தின் மூலவர்களுடைய கருத்துக்களில் முழுப் பரிமானத்தையும், அவற்றின் வளர்ச்சியையும் பற்றி வாசகர் சுயேச்சையான ஓர் அபிப்பிராயத்தை வந்தடைய முடியும்.

-லெனின்-
நூல்திரட்டு-2 பக்: 210

மேற்கோள்கள் எப்பொழுதும் அடிப்படைகளைத் திரிக்கும் போது எவ்வளவு பயனுள்ளதாக உள்ளது என்பதை லெனின் தெட்டத் தெளிவாக சுட்டிக் காட்டினார். இதன் மூலம் கூட மார்க்சியத்தின் அடிப்படைகளைப் பாதுகாப்பதும், வளர்த்து எடுப்பதுடன், ஒரு புரட்சியை வெற்றிகரமாக நடாத்திக் காட்ட லெனினால் முடிந்தது.

நாம் இன்று மேற்கோள்களைப் பயன்படுத்துவது அடிப்படைகளை வாசகர் தெளிவாகப் புரிந்துகொள்ளவும், அதை தெளிவாக சுயதேடலுக்கு உள்ளாக்கவும், திரிபுவாதத்தை அதன் தளத்திலேயே தகர்த்துவிடவுமேயாகும். மேற்கோள் பயன்படுத்துவதை அ.மாக்ஸ், மனித எழுத்தாளர்கள், உயிர்ப்பு எழுத்தாளர்கள் வெறுத்து அதன்மீது தாக்குதலை நடாத்துகின்றனர். இதில் எதுவுமே இல்லை என்கின்றனர். ஆனால் யதார்த்தத்தில் ஒரு கட்டுரை ஒரு குவிய மையத் தீர்வை சொல்வதை மறுக்கின்றனர். இதன்மூலம் அதை விவாதிக்க தயாரின்றி, தமது தத்துவ பலவீனத்தில் நின்று விலகியோடி தினிப்பை அலங்கார வார்த்தைகள் மூலம் செய்ய முனைகின்றனர்.

மார்க்சியத்தின் அடிப்படை உண்மைகளை அன்று திருத்துவதைக் கண்டு லெனின் வெகுண்டெழுந்தார். அதை எதிர்த்து ஈவிரக்கமின்றி தீரத்துடன் போராடினார். அன்று மார்க்சியத்தின் ஆன்மாவை அழிக்க முனைந்தனர். இன்று அ.மாக்ஸ், மனிதத்தின் சில எழுத்தாளர்கள், உயிர்ப்பு, நிறப்பிரிகை, இன்னும் சிலர் இதையே செய்ய முனைகின்றனர். தலைவர்களை பூசையறை படமாக மாற்றுவது முதல் சேறடிப்பது வரை இவர்களின் கைவந்த மோசடித்தனம். மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், மாஓ ஐ ஓரளவு பூசையறைப்படமாக மாற்றுவது, அதே நேரம் ஸ்டாலின் மீது அவதூறைப் பொழிந்து மொத்த மார்க்சிசத்தையும் திருத்த முனைகின்றனர். அப்படி திருத்தியபடி பூசையறைக்கே சேறடிப்பது - இந்த மோசடிக்காரர்களின் திரித்துப் புரட்டும் அரசியலாகும்.

இனி இவர்கள்எப்பொழுதும் எம் விமர்சனங்களை பழைமைவாதம் எனவும், குறுங்குழுவாதம் எனவும், இறுகிப்போன வாதமெனவும், வறட்டு வாதங்களெனவும் கூறிவருகின்றனர். இதை கடந்த வரலாற்றில் புரட்சியை முன்னெடுத்த ஆசான்கள் மீது, கடந்த கால திரிபுவாதிகள் கூறிவந்தவைகளே. இன்று இவர்கள் அதே வழியை எம்மீது பயன்படுத்துவதுடன், ஆசான்கள் மீதும் மோலோட்டமாகவும், மறைமுகமாகவும், கபடமாகவும் இதைச் சொல்கின்றனர். இதைக்கூட லெனின் தனது காலத்தில் எதிர்கொண்டார். அதை லெனின் எப்படி அம்பலப்படுத்தினார் எனப் பார்ப்போம்:

''வீ.செர்னோவ் எழுதிய தத்துவஞான மற்றும் சமூகவியல் ஆய்வுகள் என்ற நூல் மார்க்சியமும் அறிவெல்லை கடந்த தத்துவஞானமும் என்ற கட்டுரை மாக்சை எங்கெல்சுக்கு எதிராக நிலைப்படுத்துகின்ற முயற்சியுடன் நேரடியாகத் தொடங்குகிறது. எங்கெல்சிடம் ''வெகுளித்தனமான வறட்டுக் கோட்பாட்டுவாத பொருள் முதல்வாதம்'', ''ஆகக் கொச்சைத்தனமான பொருள் முதல்வாத வறட்டுக் கோட்பாட்டுவாதம்'' இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்படுகிறது... எங்கெல்சுக்கு தத்துவஞானத்தில் 'நவீனத்' தத்துஞானத்தில் அவ்வளவு புலமையில்லை என்பது வெளிப்படையாகும் என வீ.செர்னேவ் கூறுகின்றார். (அடிக்கோடு லெனின்)

-லெனின்-
இயங்கியல் பொருள்முதல்வாதம்- பக்:198

இப்படியாக எங்கெல்சை கொச்சைப்படுத்தி மார்க்சியத்தை மார்க்சின் பெயரால் நியாயப்படுத்தியபடி, மார்க்சியத்துக்கு சேறடிப்பு நிகழ்த்தப்படுகிறது. இதை லெனின் எதிர்த்துப் போராடினார். இன்று எமது காலத்தில் இதுபோன்ற முயற்சிகளை நாம் முறியடிக்கவேண்டிய இக்கட்டான காலத்துக்கு நாம்போராடவேண்டியுள்ளோம். அதேநேரம் நவீன தத்துவத்தில் எங்கல்சுக்கு அவ்வளவு புலமை இல்லையென அன்று பிரகடனம் செய்த திரிபுவாதிகளும், உயிர்ப்பு-5ல் நவீனத் தத்துவத்தை ஏற்றுக்கொள்ள முடியாது, பலர் விமர்சனமின்றி நிராகரிக்கின்றனர் என்ற உயிர்ப்பின் இன்றைய திரிபுவாதங்களும், எவ்வளவு அழகாக ஒன்றுசேருகின்றது. ஆனால் இன்று மார்க்சையும், மற்றயை ஆசான்களையும் இவர்கள் புனிதர்கள் ஆக்கிய பின், இன்றைய அச் சிந்தனையை ஏற்ற எம்மை (எங்கெல்சைப் போல்) நவீன சிந்தனையைப் பெற முடியாத குருடர்கள் எனப் பிரகடனம் செய்தே தமது திரிபை நிலைநாட்ட மார்க்சிசத்தையே திரித்துப் புரட்டுகின்றனர்.

இதையொட்டி மேலும் லெனின் கூறினார்:

''தற்போது சர்வதேச சமூக-ஜனநாயகம் சித்தாந்த ஊசலாட்டத்தால் பீடிக்கப்பட்ட ஒரு நிலையில் இருக்கின்றது. இதுகாறும் மாக்ஸ், எங்கெல்சின் போதனைகள் புரட்சித்தத்துவத்துக்குரிய உறுதிவாய்ந்த அடித்தளமாகக் கருதப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது இப்போதனைகள் குறைபாடானவை என்றும் பழமைப்பட்டு விட்டவை என்று பறைசாற்றும் குரல்கள் நாற்புறம் இருந்தும் எழுப்பப்படுகின்றன...'' ''இப்பொழுது நாம் கேட்கின்றோம் இந்தத் தத்துவத்தைப் ''புதுப்பிப்பதாய்'' பலக்கக் கூறுகிறார்களே இக்காலத்தில் பெரும் கூச்சல் எழுப்பி வருவோர்ரும் ஜெர்மன் சோசலிஸ்டு பெர்னஷ்டைனை மையமாகக் கொண்டு திரண்டிருப்போருமாகிய இவர்கள் புதிதாய் எதையேதும் இந்தத் தத்துவத்தில் புகுத்தியிருக்கிறார்களா? எதுவுமே இல்லை. வளர்த்திடுமாறு மார்க்சும், எங்கெல்சும் நம்மைப் பணித்துச் சென்ற இந்த விஞ்ஞானத்தை ஓரடியும் கூட இவர்கள் முன்னேறச் செய்யவில்லை....''. நாம் இதைச் சொல்வதற்காக மடைதிறந்து விட்டதாற் போல குற்றச்சாட்டுகள் பாய்ந்து வருமென எதிர்பார்க்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றோம். சோசலிஸ்டுக் கட்சியை ''மெய்யான பக்திமான்களது'' திருச் சபையாய் ''சமயக் கோட்பாடுகளி லிருந்து'' விலகிச் செல்லும் திருபுகளுக்காகவும் சுயேச்சையான ஒவ்வொரு கருத்துக்காகவும் ''மறுப் பாளர்களைத்'' தண்டிக்கும் அமைப் பாய் மாற்ற விரும்புகின்றோம் என்றும் மற்றும் பலவாறாகவும் கூச்சல்கள் எழுப்பப்படும். புதிய மோஸ்தராசி லிட்ட இந்த சுடுசொற்கள் யாவும் நாம் அறிந்தவையே ஆனால் சிறு துளியளவும் உண்மையோ பொருளோ இவற்றில்லை.''

-லெனின்-
-சோசலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து பக்:15

லெனின் அன்று சந்தித்த பிரச்சனை போன்று நாம் இன்று மனிதத்தின் சில எழுத்தாளர்கள், உயிர்ப்பு, நிறப்பிரி கை போன்றோர்களின் கட்டுரைகளில் வரிக்கு வரி அப்படியே காண்கின் றோம். இவர்கள் மாக்சிசத்தைத் திருத்த, திரிபுவாதத்தை தமது அகராதியாகக் கொண்டு, வார்த்தைப் பூச்சுக்களால் தம்மை மாக்சிசவாதி களாக அரிதாரம் பூசிக்கொள்கின்ற னர். மார்க்சிசத்தை நீங்கள் வறட்டுவா தமாக மாற்றிவிட்டீர்கள் எனவும், பூசைப்பொருளாக மாற்றிவிட்டீர்கள் எனவும், பல வாத்தைப் பூச்சுக்கள் மூலம் தமது திரிபுவாத முதலாளித்து வ கருத்தை வாசகரின் மீது திணிக் கும் போக்கை அவர்களின் எழுத்துக் களில் காணமுடியும். இதிலிருந்து தப்பவே இவர்கள் மேற்கோள்கள் பாவிப்பதை இவர்கள் கோபமாகத் திட்டித் தீர்கின்றனர். மேற்கோள்களை விட்டால் கட்டுரையில் எதுவுமில்லை, புள்ளிவிபரங்கள் எதுவுமில்லை, இவை தன்னியல்புவாதம் என்று பலவாக தமது திரிபுவாதத்தை திணிக் க தேடியோடுகின்றனர்.

இன்று மாக்சியத்தை அன்றுபோல் புதிப்பிப்பதாயும், சமயக்கோட்பாட்டிலி ருந்து விடுவிப்பதாகவும், இதில் குறை பாடுண்டு எனவும், பழமைப்பட்டது எனவும் பலமாகச் சேறடிப்பதை நாம் எதிர்கொள்கின்றோம். அன்று திரிபுவா திகள் பெர்னஷ்டைனை மையமாகக் கொண்டு இதை உரக்கக் கூறினர். இன்று தமிழில் அ.மார்க்சை மையமாகக் கொண்டு உயிர்ப்பு, மனித எழுத்தாளர்கள்- இந்த நவீன திரிபுவாதிகள்- அதையே மீள ஒப்பு விக்கின்றனர்.-வேறு பெயர்களில் அவ்வளவே வேறுபாடு- இன்று மாக்சிசம் சேறடிப்புக்களால் அடைந் துள்ள நிலைமைகளால் தமக்கு இசைவாக்கும் வகையில், பழைய புண்களில் வடியும் சீழ்களைப்போல் இவர்கள் உள்ளனர்.

இன்று சோவியத் சீனாவின் நிலை மையை அதன் இயங்கியலுடன், அடிப்படை மாக்சிச நிலைகளில் நின்று விமர்சிக்க தகுதியிழந்து போன இவ் விமர்சகர்கள் மார்க்சிசம் தோற்று விட்டதென கூறியே தமது திரிபை போர்த்துகின்றனர். இதை லெனின் கூட எதிர்கொண்டார். அவர் அதை எப்படி எதிர்கொண்டார் எனப் பார்ப் போம்:

''மார்க்சியத் தத்துவம்- அதன் வாழ்வு முழுவதும் போராடியே ஒவ்வோர் அடியாய் முன்னேறவேண்டி இருந்துள் ளது என்பதில் வியப்பு எதுவுமில்லை.
.... விஞ்ஞானம் மாக்சியம் என்பதாய் ஒன்று இருப்பதை கேட்பதற்குக் கூட மறுக்கிறது. மார்க்சிசம் ஏற்கவே பொய்யென நிரூபிக்கப்பட்டு அழித் தொழிக்கப்பட்டு விட்டதெனக் கூறுகிறது....... ஒரு காலத்தில் வைதீக மாக்சிச வாதியாக இருந்த பெர்னஷ்டையன் மிகுந்த சபதம் எழுப்பி மார்க்சுக்கு திருத்தங்கள் செய்வதன், மார்க்சை திருத்துவதன், திருத்தல் வாதத்தின் மிக முனைப் பான வெளிப்பாடாய் முன்வந்ததால், இந்தப் போக்கு பெர்னஷ்டைனின் பெயர் அழைக்கப்படலாயிற்று.......
அரசியற்துறையில், திருத்தல்வாதமா னது மார்க்சிசத்தின் அடித்தளத்தை, அதாவது வர்க்கப்போராடத்தின் தத்து வத்தை திருத்த மெய்யாகவே பெரு முயற்சி செய்தது. அரசியற் சுதந்திர ஜனநாயகமும் அனைத்து மக்கள் வாக்குரிமையும் வர்க்கப் போராட்டத் துக்கான அடிநிலையை அகற்றி விடுவதாகவும் தொழிலாளி வர்க்கத் துக்கு தாய்நாடில்லை என்கின்ற கம் யூனிஸ்டு அறிக்கையின் பழம்பெரும் நிர்ணயிப்பை பொய்யாக்கி விடுவதாக வும் கூறினார்கள்.

-லெனின்-
சோசலிச சித்தாந்தமும் காலாசாரம் குறித்து பக்:65

எவ்வளவு பொருத்தமாக லெனினின் இவ் மேற்கோள்கள் மனித எழுத்தா ளர்கள், உயிர்ப்பு, நிறப்பிரிகை மற்றும் அதன் கோட்பாட்டாளருக்கு பொருந்தி வருகின்றது என்பதை வாச கர்கள் கவனத்தில் கொள்ளவும். வரலாற்றில் இவர்களின் கருத்துக்கள், கூற்றுக்கள் இன்றுதான் முதல் முறை அல்ல என்பதை இவ் மேற்கோள்கள் மீளவும் நிரூபித்து விடுகின்றது. லெனி னின் ஒரு புரட்சி நடந்து முடிந்தது எனின், இவர்களுக்கு எதிரான ஒரு போராட்டத்தின் ஊடாக மட்டுமே யாகும். நாமும் ஒரு புரட்சியை நடத்த வேண்டும் எனின், வரலாறானது மீண்டும் அதே திரிபுகளுக்கு எதிராக போராட்டத்தை அனைத்துத் துறைக ளிலும் நடத்த நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்.

திருத்தல்வாதம் எப்போதும் மாக்சிச வரலாறு பூராகவும் வந்தவண்ணமே இருந்துள்ளது. அது மார்க்சியத்தை சரியாகப் புரிந்துகொண்ட பகுதியை திருத்துவதற்கு மீளமீள முயற்சிசெய் துள்ளது. இன்று மனிதத்தின் சில எழுத்தாளர், உயிர்ப்பு, நிறப்பிரிகை போன்றவற்றில் எழுதும் பலர் மார்க்சிசத் தை மீள மீள திருத்த எல்லாவிதமான கடக்கோடி சொற்தொடர்களையும், பயன் படுத்த எல்லா முயற்சியிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். நிலைமை தலைகீழாக மாறிவிட்டது என்ற சொல் அலங்காரம் இன்று மட்டுமல்ல, அன்றும் கூட அரசியல் அரங்கில் இருந்துள்ளது. அக்காலத்தில் அதற்கு எதிராக அன்றை ய மார்க்சிய வாதிகள் அக்கோட்பாட்டின் அடிப்படையை தோலுரித்துக் காட்டியது மட்டுமே, மார்க்சிசம் தொடர்ச்சியாக உயிர்வாழ்ந்தது மட்டுமன்றி வெற்றி பெறவும் முடிந்தது. அக்காலத்தில் இதே பிரச்சனையை ஒட்டி லெனின்:

''தனது நடத்தையைச் சந்தர்ப்பத்திற்குச் சந்தர்ப்பம் மாற்றி நிர்ணயித்துக் கொள்ளுதல், அன்றன்றைக்குமான நிகழ்ச்சிகளுக்கும் அற்ப விவகார அரசிய லின் திருப்பங்களுக்கும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளுதல், பாட்டாளி வர்க்கத்தின் தலையாய நலன்களையும் முதலாளித்துவ அமைப்பு அனைத்தின், முதலாளித்துவம் பரிணாமம் அனைத்தின் அடிப்படைக் கூறுகளையும் மறுத்துவிடு தல், இந்தத் தலையாய நலன்களை அந்தந்தத் தருணத்திற்குரிய மெய்யான அல்லது கற்பிதமான நலன்களுக்காகப் பலியிடுதல் - இவைதான் திருத்தல் வாதத்தின் கொள்கை. இந்தத் கொள்கையின் தன்மையிலிருந்தே வெளிப்படையாய் பெறப்படுவது என்ன வெனில், இது எண்ணிலடங்காப் பல்வேறு வடிவங்களை ஏற்க்கும் என்பதும், ஓரளவுக்கோ பெருமளவுக்கோ ''புதுமை யான'' ஒவ்வொரு பிரச்சனையும் நிகழ்ச்சிகளில் ஓரளவுக்கோ பெருமள வுக்கோ எதிர்பாராத முன்னறியாத ஒவ்வொரு திருப்பமும் - அடிப்பை வளர்ச் சித் திசையை அது மிகச் சொற்ப அளவுக்கு மட்டுமே தான், மிகமிகச் சொற்ப காலத்துக்கே தான் மாற்றுகின்றது என்றாலும் கூட - தவிர்க்க முடியாத வகையில் ஏதேனும் ஒருவகைத் திருத்தல் வாதத்தை எப்பொழுதும் தோற் றுவிக்கவே செய்யும்...... திருத்தல்வாதம் ஒரு சர்வதேச நிகழ்ச்சிப் போக்கு........
'இடது கட்சியில் இருந்தான திருத்தல் வாதமும்' கூடத் தன்னை மாக்சியத் துக்குத் தகவமைத்து, மார்க்சியத்தை ''திருத்தி வருகிறது''....... தவறாக புரிந்து கொள்ளப்பட்ட மார்க்சின் நிலையிலிருந்து சரியாய் புரிந்துகொள்ளப்பட்ட மார்க்சின் நிலைக்கு அடிக்கடிவேண்டுகோள் விடுக்கின்றனர்.''

-லெனின்-
சோசலிச சித்தாந்தமும் கலாச்சாரம் குறித்து பக்: 76

திருத்தல்வாதம் என்பது அதன் அரசி யல் குணாம்சம் எப்பொழுதும் மார்க்சிசத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைத் திருத்துவதுடன் கூடிக்குலாவி நிற்கின்றது. இன்று இவர்கள் பொதுவில் மார்க்சிசத்தின் மீது தாக்குதலைத் தொடுக்கும் போது ''பொருளாதாரவாதம்'' என்ற சொற்தொடர்கள் மீதுதான் முதலில் திருத்தம் செய்ய நினைக்கின்றனர். பொருளாதாரம் என்ற அடிக்கட்டுமானத்தை கேள்விக்குள்ளாக்குவது இவர்களின் திருத்தல் வாதத்தின் பிரதான அம்சமாகவுள்ளது. நாம் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் விவாதித்தது போன்று மார்க்சிசம் என்பது மார்க்சால் உருவாக்கப்பட்டதே. மார்க்ஸ் எதை அடிப்படையாகக் கொண்டு மார்க்சிசத்தை உருவாக்கினாரோ, அதைத் திருத்துவது என்பது மார்க்சிசத்தை மறுதலிப்பதாகும். அடிப்படையைத் திருத்துவது என்பது வேறு ஓர் புதிய தத்துவமே. அது குட்டிபூர்சுவா கருத்தாக்கமே. அது கருத்துமுதல் வாதமேயாகும்.

மார்க்சிசம் என்பது மார்க்சின் உடையதே. அதை லெனின் மார்க்சின் போதனை என்ற கட்டுரையில் ''மார்க்சின் கருத்துக்கள், போதனைகள் அடங்கிய முழுத் தொகுப்பே மார்க்சியம்'' என லெனின் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். பொருளாதார சமுதாயத்தின் அனைத்து செயற்பாட்டை வகுத்து விளக்குகின்றது என்பதை நாம் ஏற்றுள்ளபடியால்தான் இதை மறுக்கும் திரிபுவாதிகளை நாம் அம்பலப்படுத்த முனைகின்றோம். மார்க்சிசம் என்பது பொருளாதாரம் என்ற அடிப்படைமீதே அமைந்தது. இதை மார்க்ஸ் கண்டுபிடித்த படியால் தான் இது மார்க்சிசம் ஆனது. இதை மாக்சிசத்தின் மூன்று உள்ளடக்கம் என்ற பிரசுரத்தில் லெனின் ''பொருளாதார அடிப்படை முறை என்ற அடித்தளத்தின் மீதுதான் அரசியல் மேற்கட்டுமானம் கட்டப்படுகின்றது என்று ஏற்றுக்கொண்டவுடன் மார்க்ஸ் தனது பெரும்பாலான கவனத்தை இந்த பொருளாதார அமைப்பு முறையின் மீது செலுத்தினார்..... முதலாளித்துவ பொருளாதார வாதிகள் பொருட்கள் இடையிலான (ஒரு பண்டம் மற்றொன்றுடன் பரிமாற்றம் செய்து கொள்ளப்படும்) உறவு என்பதாக விவரித்ததில் மனிதர்கள் இடையிலான உறவு (அடிக்கோடு லெனின்) நிலவுவதை மாக்ஸ் புலப்படுத்தினார்.''

மனிதர்களுக்கு இடையிலான அனைத்து உறவுகளும், சிந்தனையும் செயலும் பொருளாதாரம் என்ற அடிக் கட்டுமானத்தில் தான் இயங்குகின்றது. இதுதான் மார்க்சிசம். மாக்சின் பெயரால் உள்ள மாக்சிசம் இதுமட்டுமே. இதை நிராகரிக்கும் கோட்பாடுகள் மார்க்சியம் அல்ல என்பதை மேலுள்ள மேற்கோள்கள் மிகவும் தெளிவாகவே வசகர்கள் மார்க்சிசம் என்றால் எது என்பதைப் புரிந்துகொள்ள உதவும்.

இதை மார்க்சின் பொருளாதார போதனைகள் என்ற நூலில் லெனின் ''இயக்கத்துக்குரிய பொருளாதார விதியை வெளிப்படுத்திக் காட்டுவது தான் மூலதன் என்ற நூலின் இறுதியான நோக்கமாகும்.'' என்ற மாக்சின் எடுகோளை சுட்டிக்காட்டிய லெனின் ''வரலாற்றின் வழியே வரையறுக்கப்பட்ட, குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் உற்பத்தி உறவுகளை அவற்றின் தோற்றம், வளர்ச்சி, நலிவு ஆகிய கட்டங்களிலே பரிசீலனை செய்வது - இதுதான் மார்க்ஸின் பொருளாதார போதனையின் உள்ள டக்கம் முதலாளித்துவ சமுதாயத்தில் ஆட்சி செலுத்துவது பண்டங்களின் உற்பத்திதான். (அடிக்கோடு லெனின்) ஆகவே மார்க்சின் பகுப்பாய்வு பண்டத்தைப் பரிசீலிப்பதிலிருந்து தொடங்குகின்றது.''

நாம் நீண்ட மெற்கோள்களுடன் மார்க்சிசம் என்றால் என்ன? திருத்தல் வாதம் என்றால் என்ன? என்பதை நீண்ட பல மேற்கோள்கள் மூலம் உங்கள் கவனத்தைத் திருப்பியுள்ளோம். திரிபுவாத எழுத்தாளர்கள் சிண்டுபிடித்து விளையாடுவதில் கைதேர்ந்தவர்கள். ஒரு கருத்தை நிராகரிக்க, அக்கருத்தைச் சாராத ஒரு சொற்தொடர் மூலம், அது அப்படித்தான் இது அப்படித்தான் என்ற வகையில் முத்திரை குத்திச் சென்றுவிடுகின்றனர். மனிதத்தில் எழுதியவர் புலிகளுக்கு வர்க்கமில்லை என்று வாதிடின் அது அடிப்படை மாக்சிசத்தைத் திரிப்பதே ஆகும். இதை சுட்டிக்காட்டும்போது இவர்கள் இப்படித்தான் என முத்திரை குத்தும் போக்குடன் மாக்சிசத்தைத் திருத்த முனைகின்றனர்.

அந்தவகையில் நவமார்க்சிசம் என்றால் என்ன என்பது முதல், இந்த திரிபுவாத சொற்தொடர்கள் கடந்த மார்க்சிச வரலாற்றில் மீள மீள அரங்றேியதை நீண்ட மேற்கோள்கள் மூலம் சுயதேடலுக்கு உங்களை நகர்த்துவது அவசியமாக இருந்ததே இக்கட்டுரை யின் நோக்கமாகும். இதன் மூலம் மனிதத்தின் சில கட்டுரையாளர்கள், உயிர்ப்பு, நிறப்பிரிகை, போன்றவற்றை இனம்கண்டு, அதை அம்பலப்படுத்த வேண்டியது ஒவ்வோர் புரட்சியாளனின் இன்றைய தேவையும், வரலாற்றுக் கடமையுமாகும்.



# டயானாவின் ஒழுக்கம் என்பது- விபச்சாரம், டயானாவின் சமூகத் தொண்டு- ஆடம்பரமாகும்

பிரிட்டிஷ் அரசகுடும்பமும் அதில் டயானாவும் மக்கள் வரிப்பணத்தில் சொகுசு வாழ்க்கை வாழ்வதுடன், தங்களின் கோமாளித் தனத்தை பறை சாற்றவும் கோடிகோடியாக அள்ளி இறைக்கின்றனர். பிரீன்சு முதலாளித்துவப் புரட்சியைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசு உள்நாட்டு முதலாளிகளுடன் ஒரு சமரசமான வகையில் சில விட்டுக்கொடுப்பக்களுடன் இரத்தம் குடிக்கும் அட்டையாக கடந்த 200 வருடங்கள் ஓடிவிட்டது.

டயானா பற்றிய கிசுகிசுக்கள் இன்று பல ஆயிரம் பத்திரிகைகளை அதன்பால் திருப்பியுள்ளன. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் என பல்வேறு செய்தி ஊடகங்கள் பலமணி நேரங்களையும், பல லட்சம் பக்கங்களையும் வீணடித்து வருகின்றன.

மக்களின் பிரச்சனை இதுதான் எனக் காட்டும் வகையில் அதன்மீது விவாதத்தை நடத்துவதும் எனக் கோடி கோடியாக செலவுசெய்து மண்றாடுகின்றன. இதுதான் ஜனநாயகத்தின் அதியுன்னத பரிசு! டயானாவின் விபச்சாரத்தையே மனித ஒழுக்கமாக மாற்றும் வகையில் டயானாவின் முன் உதாரணத்தை பேண செய்தி ஊடகங்கள் முயற்சிக்கின்றன.

இன்று டயானா இலங்கைப் பணத்தில் 50 கோடி ரூபாயை தனது ஒரு வருடச் செலவாக செலவழித்து வருகின்ற ஓர் ஊதாரியாகும். இது மாதம் கிட்டத்தட்ட 3 கோடி ரூபாயாகும். எந்த உழைப்பிலும் ஈடுபடாத மக்களின் வரிப் பணத்திலும், மூன்றாம் உலகநாடுகளை சுரண்டக் கிடைத்த பணத்தையும் கொண்டு ஊதாரித்தனம் செய்யும் ஒரு விபச்சாரி அழகி, சமூகத் தொண்டுசெய்ய பிரகடளம் செய்கின்றார். மக்களின் மீது அன்பு கொண்டவரென வேறு அண்டப்புளுகு புளுகுகின்றனர்.

உழையாது மக்களின் பணத்தில் தின்று கூத்தாடி தமது விபச்சாரத்தையை நடத்தும் ஒரு ஊதாரி மக்களைக் கொள்ளையடித்து ஏமாற்ற சில நல்லபிள்ளை வேஷங்கள் தேவைப்படுகின்றது. அதுதான் மக்கள் பற்றி சில உச்சரிப்புக்கள் அவ்வளவே. இவர்கள் பிரிட்டிஷ் சமூகத்தில் மட்டுமன்றி உலக சமூகத்திலும் இருந்து ஒழித்துக்கட்டப்பட வேண்டியவர்கள் ஆவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னாள் போலி கம்யூனிஸ்டுக்களின் வெற்றியும் மார்க்சிசத் திரிபுகளின் பம்மாத்து அரசியலும்

கமினிசம் தோற்றுவிட்டதென ஏகாதிபத்தியமும், மார்க்சிச வேடமிட்ட வேடதாரிகளும் மாறி மாறி கூச்சலிட்டு வரும் இன்றைய நிலைகளில், முன்னைய கமினிச நாடுகளில் மீளவும் கம்யூனிசக் கட்சிகள் வெற்றி பெற்று வருகின்றன. இந்தவகையில் அண்மையில் நடந்த டுமாவுக்கான ருசியத் தேர்தலில் 22 வீத வாக்குக்களைப் பெற்று டுமாவுக்கான மொத்தத் தொகுதிகளில் மூன்றில் ஒரு பகுதியை கம்யூனிசக் கட்சி பெற்றுள்ளது.

1960 களில் குருசேவ்- பிரேஸ்னேவ் கும்பல் மக்களின் கம்யூனிச உணர்வுகளை, அங்கு நடந்துகொண்டிருந்த வர்க்கப் போராட்டத்தை ஒழித்துக் கட்ட, அணு ஆயுதம் எவ்வளவு அபாயமானது எனக் கூறியபடி ஸ்ராலினின் சரியான கம்யூனிச நிலையை மறுத்து முதலாளித்துவத்தை மீட்டனர். இன்று ருசியாவில் மக்கள் உண்மையான வர்க்கப் புரட்சியை உயர்த்திப் பிடிக்கும் இன்றைய நிலையில் 1960 களில் நடந்ததைப் போல் இன்றைய போலி கம்யூனிசக் கட்சித் தலைவர்கள் அம்மக்களின் மேல் சவாரி செய்ய எல்லாவித செல்வாக்குகளையும் பயன்படுத்துகின்றனர்.

கம்யூனிசக் கட்சி சிவப்பு (PCR) என்ற பெயரை இன்று சூடியபடி அதன் தலைவர் கென்னடி ஜீகானால் கால்மார்க்சின் நினைவு மையத்தின் முன் நின்று உரத்துக் குரல் கொடுக்கின்றனர். அப்பொழுது அவர் ''யார் பணக்காரனோ அவன் கள்ளன்'' என்றார். பெரிய அங்காடிக் கடைகளில் உள்ள பொருட்கள் எமது உற்பத்தியல்ல. அவைகள் கள்ளர் கூட்டம் நடத்துகிறது என்றார். 1991ல் இராணுவச் சதியில் ஈடுபட்ட முனாள் இவர்களின் சகாக்களை குறிப்பிட்டு அவர்கள் எமக்குத் தேவையில்லை என்கிறார். கொப்பச்சேவ் போன்ற மேய்க்கின்ற ஆட்சி எமக்குத் தேவையில்லை என்றார். கொப்பச்சேவ் முதல் தரமான கள்ளன் என்றார். நாம் ஸ்ராலினின் ஆட்சியை நிறுவுவோம் என்கிறார். இவ்வாறு சொல்லலங்காரப் பேச்சுக்களின் மூலம் கைதட்டல்களை பெறும் போலிக் கம்யூனிசத் தலைவர்கள் இன்று ருசியாவிலேயே மிகப் பொரும் கட்சியாக ருசிய மக்களின் உணர்வுகளைத் தனக்குச் சாதகமாக்கியுள்ளார்.

15 கோடி மக்களைக் கொண்ட ருசியாவில் 10.5 கோடிப்பேர் வாக்களிக்கும் தகுதியைப் பெற்றனர். இதில் 3.7 கோடிப்பேர் ஓய்வூதியம் பெறுவோர் ஆவர். இன்று ருசியாவில் 2 கோடிப் பேருக்கு வேலையில்லை. இது அங்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை 30 வீதமாக உயர்த்தியுள்ளது. 1.5 கோடிப் பேருக்கு இருக்க வீடுவாசல் இல்லை. 1கோடிப்பேர் குடும்பங்களை விட்டு அனாதைகளாக அலைகின்றனர்.

இதுதான் முதலாளித்துவம் கொடுத்த பரிசு. எல்லோருக்கும் வேலை உத்தரவாதத்தைக் கொடுத்த கம்யூனிசம் அதிலிருந்து திடீரென ஏற்பட்ட முதலா





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளித்துவ வீக்கம் 1993ல் 1.1 வீத வேலையின்மையை மட்டுமே கொண்டிருந்தது. இது இன்று 30வீதமாக அதிகரித்துள்ளது. அதாவது 1993ல் 8 லட்சமாக இருந்த வேலையின்மை இன்று 2 கோடியாக அதிகரித்துள்ளது.

இன்று அதிகரித்துச் செல்லும் பணவீக்கம், அன்றாட உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பும் மக்களைப் பட்டினிக்குள் இட்டுச் செல்கிறது. இலங்கையின் ஒரு ரூபாவுக்கு 100 ரூபிள் ருசியப்பணத்தைப் பெறமுடியும். அதேநேரம் இலங்கையின் சராசரி சம்பளத்தை விட இங்கு மிகக் குறைவாகவே பெறுகின்றனர். உதாரணமாக:- 1410 இலங்கை ரூபாயை வருவாயாகப் பெறும் ஒருவர் ஒரு இறாத்தல் பாணுக்குக் கொடுக்கும் பணம் 20 ரூபாவாகும். ஒரு கிலோ மாட்டிறச்சி வாங்குவதாயின் 171 ரூபாய் தேவைப படுகிறது. சிறிய தோடம்பழம் ஒரு கிலோ வாங்க வேண்டின் (Climentjre) 300 ரூபாய் தேவையாகும். 300 கி.மீக்கான புகை வண்டிப் பயணத்திற்குத் தேவையான பணமோ 400 முதல் 500 ரூபாயாகும்.

இது இன்று ருசியாவை முதலாளித துவத்திற்கு இட்டுச் சென்றவர்கள் மக்களுக்குக் கொடுத்த பரிசாகும். ஸ்ராலினின் மீது சேறடித்தபடி இவர்கள் ஜனநாயகத்தை மீட்ட அவலட்சனத்தின் ஒரு பகுதிதான் இது. இன்னுமொரு பக்கத்தில் ஸ்ராலின் காலத்தில் பெண்கள் தம்மை சுதந்திரமானவர்களாக மாற்றினர். அவர்களுக்கு உழைப்புக்கான உத்தரவாதங்கள் ஆணாதிக்கத்திற்கு எதிராக பெண்களைப் பாதுகாக்கும் சட்டங்கள், விவாகரத்தை ஒரு தபாலட்டையில் எழுதிப் போடுவதன் மூலம் பெற்றுவிடும் என்று பல்வேறு வசதிகளைப் பெண்கள் பெற்றிருந்தனர். இன்று ஜனநாயகவாதிகள் மக்களை அடிமைப்படுத்துவது பற்றிக் கூற மதவாதிகள் ஆசிவழங்க, மாபியாக் கும்பல்கள் பெண்களை துப்பாக்கி முனையில் கடத்துகின்றனர்.

பெண்களை ஆசைகாட்டிக் கடத்துவது, துப்பாக்கி முனையில் கடத்துவது, ஆடம்பர நுகர்பொருள் பற்றி ஆசைகாட்டிக் கடத்துவதென எல்லா வகையிலும் பெண்கள் விபச்சாரிகள் ஆக்கப்படுகின்றனர். ஜெர்மனியிலிருந்து பிரேக் வகையிலான 12 கி.மீ தூரத்தில் 300 விபச்சார விடுதிகள் நிறுவப்பட்டுள்ளது. இரும்புத்திரை தகர்ந்தபோது நல்வாழ்வு தேடி பெண்கள் மேற்குநாட்டு விபச்சார விடுதிகளை நோக்கி ஓடுகின்றனர். ஜெர்மனியில் உள்ள 2,00,000 விபச்சாரிகளில் 40,000 பேர் கிழக்கிலிருந்து வந்தவர்கள். டுபாய்க்கு 14 நாள் விசா பெற்றுச் செல்லும் பெண்கள் விபச்சாரம் செய்து திரும்பும் போது ஆடம்பர நாகரீகப் பொருட்களுடன் திரும்புகின்றனர்.

மேற்கு நாடுகளில் இரவு விடுதிகளின் முன்பு ஒரு சதவிகிதமாக இருந்த கிழக்கத்தைய பெண்கள் கடந்த மூன்று வருடத்தில் 50 சதமாக அதிகரித்துள்ளது. இஸ்ரேலின் டெங் அலிவ் நகரத்தில் 50 தாக இருந்த விபச்சார விடுதிகள் இன்று 150 தாக உயர்ந்துள்ளது. மாபியாக் கும்பல் பெண்களைக் கடத்தி கற்பழித்து, அடித்து உதைத்து விபச்சாரத்தில் ஈடுபடுத்துகிறது. அதேநேரம் அநேக பெண்களின் பற்கள் உடைக்கப்பட்டிருக்கிறது. இது ஜனநாயகத்தின் இன்னெரு பக்கம். மற்றும் இன்று ருசியா எங்கிலும் மாபியாக் கும்பல்கள் பெருக்கெடுத்துள்ளது. இவர்கள் உள்நாட்டு அரசியல், வெளிநாட்டு அரசியலைக் கட்டுப்படுத்துவதுடன், தனியார் மயமாக்கலை முழுமையாக அமுல்படுத்தி கட்டுப்படுத்துகின்றன.

ஒரு லட்சம் பேரைக்கொண்ட 5,500 மாபியா அமைப்புக்கள் இயங்குகின்றன. இவை மாமூல் முதல் ஆட்கடத்தல் வரை தொழிலாகக் கொண்டுள்ளன. இவர்கள் தமக்கிடையில் ஓர் அமைப்பாக இயங்குவதுடன், 70 முதல் 300 பேர்வரை கொண்ட குழுக்களாகும். 15 முதல் 200 மாபியா குழுக்கள் சர்வதேச தொடர்பை க் கொண்டுள்ளதுடன் அங்கு பல நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றது. இது அமெரிக்காவில் 24உம், ஜெர்மனியில் 47 உம், இத்தாலியில் 60 தெனவும் உள்ளது.

இம்மாபியாக் குழுக்கள் தம்மை அம்பலப்படுத்துவோரை படுகொலை செய்கிறது. இந்தவகையில் 30 ருசிய பத்திரிகையாளரை படுகொலை செய்தும், 35 வங்கியாளரைப் படுகொலை செய்துமுள்ளனர். இந்த மாபியாக் கிரிமினல் கும்பலகள் 40,000 தனியார் மயமான தொழில் கழகங்களில் புகுந்து முற்றாகக் கட்டுப்படுத்துகின் றன. 1993ல் ருசியாவில் 28 லட்சம் குற்றம் நடந்ததாக அறியப்பட்டுள்ளது. இது கடந்த பத்து வருடத்தை விட 200 சதவிகிதம் அதிகமாகும். இதில் 30,000 கொலைக் குற்றங்களாகும். கொலைக் குற்றம் முந்தைய ஆண் டைவிட 27 சதவிகிதம் அதிகமாகும்.

ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்ட கம்யூனிஸ்டுகள் முதல் முன்னாள் பல கம்யூனிஸ்டுக்களே இன்று மிகப்பெரி ய பணக்காரர்கள்.. அதற்கான பணத்தை நீண்டகாலமாகச் சேகரித் ததை இன்று ஒப்புக் கொண்டுள்ளனர். அத்துடன் தனியார் மயமாக்கலில் இவர்களின் பங்கே அதிகமாகும். பல் வேறு தனிப்பட்ட மாபியாக் குழுக்க ளை தமது பாதுகாப்புக்கு உருவாக்கி இயக்குவதுடன், ருசியப் பொருளாதாரத்தையே கட்டுப்படுத்தி வருகின்றார்கள்.

தனியார் மயமாக்கலுடன் கூட்டுப்பண்ணைகள் தனியார் மயமாக்கப்பட்டது. 1995ல் ருசியாவின் அறுவடை 53.5 மில்லியன் தொன்னாக குறைந்துள்ளது. இது கடந்த 30 வருடத்தில் மிக மோசமான உற்பத்தியாகும்.



ருசியாவில் இன்று முற்றாகச் சீரழிந்து மக்கள் பஞ்சப்பட்டினியுடன் வீதிக்கு வரும் நிலையில் இன்னும் ஒரு பக்கத்தில் ஆடம்பரத்துக்கும் அருவருக்கத்தக்க வாழ்வுக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஜனநாயகச் சிப்பிகள் ஆட்டம் போடுகின்றனர். இந்நிலைமைகளின் ஊடாகவே நாம் இத்தேர்தலைப் பார்க்க வேண்டும். மக்கள் கம்யூனிசத்தின் உண்மையை உணர்ந்து லெனின், ஸ்ராலின் படங்களுடன் மட்டும் வீதிக்கு வந்துள்ளனர். மக்கள் 1993 தேர்தலுக்கும் 1995 தேர்தலுக்கும் இடையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாரிய வேறுபாட்டை இனம்காட்டியுள்ளனர்.

| | 1993 | 1995 |
|---|---|---|
| லிபரல்கட்சி ஜிரிணோலிஸ்சி | 24% | 11.2% |
| கம்யூனிஸ்டு கட்சி சிவப்பு (-1) | 11% | 21.9% |
| ரஷ்ய விருப்புக்கட்சி | 15% | 4.8% |
| அக்கிரார் கட்சி | 08% | 3.1% |
| ரஷ்ய பெண்கள் அமைப்பு | 8.7% | 4.5% |
| கம்யூனிஸ்டு கட்சி (AMPILOI) (11) | —— | 4.3% |

1993ல் 53 வீதம் வாக்களித்தனர். இன்று இது 65 வீதமாகவுள்ளது. அதாவது 6.8 கோடிப்பேர் மட்டுமே வாக்களித்தனர். 4 கோடிப்பேர் வாக்கவிக்கவில்லை. 5வீதம் வாக்குப் பெற்றவர்கள் மட்டமே டுமாவுக்குச் செல்ல முடியும் என்பதால் 51 வீத வாக்குப் பெற்ற 4 கட்சி உறுப்பினர்கள் மட்டுமே டுமாவக்குத் தெரிவு செய்யப்பட்டனர். 6.8 கோடி வாக்காளர்களில் 3.4 கோடிப்பேர் வாக்குக்களை 4கட்சிகள் மட்டும் கொண்டே டுமா உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் கம்யூனிஸ்டுக்கள் பெற்றது 1.5 கோடி வாக்குக்கள் மட்டுமே. இது மொத்த வாக்காளரில் ஏழில் ஒரு பங்காகும். இந்தத் தேர்தல் என்பது எவ்வளவு போலியானது என்பதும், ஜனநாயம் என்பது எவ்வளவு மோசடி என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

மக்களின்று ஒரு புரட்சியை, வர்க்கப் போரை விரும்பும் இன்றைய நிலைகளில் யூன் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர் தலில் மக்கள் உண்மையான உணர்வுகளை போலிக் கம்யூனிசத் தலைவர்கள் ஏமாற்றி நட்டாற்றில் விட உள்ளனர்.

அந்தவகையில் நடைபெறும் தேர்தலில் போலிக் கம்யூனிசத் தலைவர்களும், பாசிச தலைவர்களுக் கும் இடையில் நடைபெறும் என்பதை கோடிட்டுக் காட்டுகிறது. மக்கள் ஒரு இக்கட்டான மீளமுடியாத பள்ளத்துக் குள் இட்டுச்செல்லவுள்ளனர். இருந்தபோ தும் இன்று புதிய கம்யூசிசக் கட்சிகள் தலையெடுத்துள்ளதால் மக்கள் மீளவும் தம்மை மறுபரிசீலனை செய்யவும், ஓர் உள்நாட்டு யுத்தம் மூலம் மட்டமே புரட்சியை நடத்தமுடியும் என்பதையும் இனம்காண்பார்கள்.

# ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளை தூக்கிலிட்ட

## நைஜீரியாவின் இராணுவ ஏகாதிபத்தியத் தரகரசு

நைஜீரியா ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி கென்-சாரோ-லிவாவையும் வேறு 9 பேரையும் நவம்:10ல் தூக்கிலிட்டது நைஜீரியத் தரகரசு. இதைத் தொடர்ந்து உலகெங்கும் பலத்த எதிர்ப்புகள் எழுந்தன. இருந்தபோதும் ஏகாதிபத்தியங்கள் அமத்தி வாசித்து நைஜீரியாவின் ஜனநாயக விரோத இராணுவ ஆட்சியை தக்கவைத்துள்ளனர். கடந்த 10 வருடத்தில் 1,800 பேரைக் கொன்று தீர்த்த நைஜீரிய அரசு, பிரபல எழுத்தாளரும், கவிஞரும், 1995ம் ஆண்டு ஆபிரிக்கா சுற்றுச்சூழல் கோல்டுமென் விருதைப் பெற்றவரும், ஒகோளி மக்களின் வாழ்வுரிமை இயக்கத்(MOSOP) தலைவருமான கென் சாரோ லிவாவை தூக்கிலிட்டதன் மூலம் ஏகாதிபத்திய விசுவாசத்தை நைஜீரிய இராணுவ அரசு பிரகடனம் செய்துள்ளது.

உலகிலேயே மிகப் பெரிய பன்னாட்டு ஏகபோக எண்ணெய் நிறுவனமான 'ஷெல்' நிறுவனத்திற்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடியதே இவர் செய்த குற்றமாகும். ஷெல் நிறுவனம் அந்நாட்டின் எண்ணெய்யை உறுஞ்சி வற்றவைத்ததுடன், சுற்றுச்சூழலை நாசமாக்கி அமிலமழையைப் பொழிய வைத்த இன்றைய நிலையில் இங்கு எல்லா உயிரினமும் அழிந்துவிட்டது. அப்பகுதி மக்கள் வாழ்வை இழந்துபோய் உள்ளனர். ஐரோப்பிய சுற்றுச்சூழல் போராட்டவாதிகள் மௌனம் சாதிக்க, அங்கு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் வீறு கொண்டது. இதனைக்கண்டு கொதித்த ஷெல் நிறுவனமும், அதன் ஏகாதிபத்தியத்தினதும் தேவையை அழகாகப் புரிந்து கொண்ட நைஜீரிய அரசு லிவாவை கொன்றொழித்துள்ளனர். ஜனநாயகம் பற்றி பீற்றுகின்ற ஏகாதிபத்தியங்கள் கடமைக்கு குரல் கொடுத்துவிட்டு இராணுவ ஆட்சியாளருக்கு தேவையானதை அள்ளி உதவுகின்றனர். இன்று எழுந்துவரும் இராணுவ ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பை தனக்குத் தேவையானதலைமையை அங்கு எதிர்காலத்தில் ஏற்படுத்துவதன் மூலம் ஜனநாயக வேடமிட, இன்றே தயாராகி வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழ் தொடர்

# உலக ஒழுங்கமைப்புக்கு உட்பட்ட உலகமானது, மீண்டும் ஏகாதிபத்திய காலனியாக..

## ஜெர்மனியின் புதிய மேல்நிலை - வல்லரசாக...

ஐரோப்பாவில் 32 சுயாதிபத்திய நாடுகள் உள்ளன. அவற்றில் 26 நாடுகள் மேற்கு ஐரோப்பாவைச் சார்ந்தவைகள். இவ் 26ல் 12 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய சமூகம், மக்கள் தொகையில் அமெரிக்காவை விடவும் 1.4 மடங்கு அதிகமானதாகும். இது ஜப்பானை விடவும் 2.7 மடங்கு கூடுதலாகவுள்ளது.

1984 கணக்குப்படி ஐரோப்பிய சமூகத்தில் 12 நாடுகளது மொத்த ஆலை உற்பத்தி அமெரிக்காவை விடவும் 13.4 சதவிகிம் அதிகமானதாகும். இதன் மூலம் உலக பொருளாதார மேல் நிலை வல்லரசாக ஐரோப்பா மாறி உள்ளது. இது ஜப்பானை விட 2.3 மடங்கு அதிகமாகும். இவற்றின் ஏற்றுமதி அமெரிக்காவை விட 2.8 மடங்கும், ஜப்பானை விட 3.6 மடங்கும் அதிகமாகும்.

ஐரோப்பிய சமூக நாடுகளில் ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், ஸ்பெயின் ஆகியவை இராணுவ பலமிக்கவை. 6,67,400 பேரைக் கொண்ட ஐக்கிய ஜெர்மனியும் அதன் தேசிய மொத்த வருவாயில் 3.5 சத விகிதத்தை இராணுவத்திற்கு என்று ஒதுக்கியது. 5,58,000 பேரைக் கொண்ட பிரான்ஸ் தனது தேசிய மொத்த வருமானத்தில் 4 சதவிகிதத்தை ஒதுக்கியது. 4,46,000 பேரைக் கொண்ட இத்தாலி 4.8 சத விகிதத்தையும், 3,37,000 பேரைக் கொண்ட இங்கிலாந்து 4.3 சத விகிதத்தையும், 3,04,000பேரைக் கொண்ட ஸ்பெயின் 3.4 சத விகிதத்தையும் முறையே தமது தேசிய மொத்த வருவாயில் இராணுவத்திற்கு செலவு செய்கிறது. ருசிய இராணுவ ஆட் பலம் 39 லட்சமாக உள்ள அதேநேரம் ஐரோப்பாவின் பலம் 32.6 லட்சமாக உள்ளது. அமெரிக்காவின் பலமோ 22.46 லட்சமேதான்.

உலக இராணுவ செலவில் ஐரோப்பாவின் பங்கு 14.5 சத விகிதமும் அதன் இராணுவ ஆட்பலம் 11.5 சத விகிதமாகவும் இருக்கிறது. ஐரோப்பிய நாடுகளில் ஜெர்மனியின் மக்கள் தொகை 19 சத விகிதமாக உள்ள அதேநேரம் மொத்த உற்பத்தியில் 22 சத விகிதத்தையும், ஏற்றுமதியில் 31 சத விகிதத்தையும் மேற்கு ஜெர்மன் கொண்டுமிருந்தது. 1980களில் மாபெரும் அதிசயத்தை மேற்கு ஜெர்மன் பொருளாதாரம் சாதித்தது. 4.6 சத விதத்தால் தேசிய மொத்த வருவாயை உயர்த்தி 2,28,00,000 கோடி ரூபாயை அடைந்தது.

1989ல் முதல் ஏழு மாதங்களில் மட்டும் 18 சத விகித ஏற்றுமதி அதிகரிப்பை ஏற்படுத்தி, ஏற்றுமதி வர்த்தக உபரியாக 1,46,300 கோடி ரூபாயைப் பெற்றது. அதி நவீன கணிப்பொறி இயக்கத்தைக் கொண்ட இயந்திர கருவி சாதனங்கள் மூலம் ஐரோப்பிய சமூகத்தில் 35 சத விகிதத்தை கைப்பற்றியது. இது 1,84,300 கோடி ரூபாய் மதிப்புடையது.

'யானைகளின் கல்யாணம்' என்று அழைக்கப்பட்ட சில ஏகபோக கம்பனிகளை கைப்பற்றி 83,600 கோடி ரூபாய் வருமானம் பெறும் பென்ஸ் கம்பனி ஆயுத, மன்னனு, விண்வெளிதுறைக்கு விரிவுபட்டு உள்ளது. இதன் மூலம் உலகில் மிகப் பெரிய ஆயுத தளபாட உற்பத்திக் கழகமாகியது. இதேபோல் ஜெர்மனியின் மின்-மன்னறு பூதமாகிய சீமன்ஸ் கம்பனி பிரிட்டனின் பிளேஸ்சி கம்பனியை விழுங்கி உலகிலேயே மூன்றாவது பெரிய தொலைத் தகவல்துறை உற்பத்தியாகியது.

உலகிலேயே ஜப்பானுக்கு அடுத்த அரசுக்கடன்-உதவி, தனியார் நிதி மூலதன ஏற்றுமதி நாடாக மேற்கு ஜெர்மனி வளர்ந்தது. 1989 இறுதியில் ஜப்பானை எட்டிப்பிடித்த மேற்கு ஜெர்மனியின் வெளிநாட்டு சொத்து மதிப்பு 42.57,000 கோடி ரூபாயாகும். அதன் ஏற்றுமதி வர்த்தக உபரி மதிப்பு 1,53,9000 கோடி ரூபாய்களாகும். கிழக்கு ஜெர்மனி மேற்கு ஜெர்மனியுடன் இணையும் போது கிழக்கு ஜெர்மனி எதுவுமின்றி வந்துவிடவில்லை. அதன் தனிநபர் நிகர உற்பத்தியோ ஸ்பெயின் நாட்டை விடவும் அதிகமாகும். 60 சத விகித மொத்த உள் உற்பத்தித்திறன் பெற்றிருந்தது. கிழக்கு ஜெர்மனியின் ரொக்க கடன் 7,600 கோடி ரூபாய் மட்டுமே. அதன் நிகர ரொக்க இருப்பு மட்டும் 34,200 கோடி ரூபாய்களாகும்.

ஐக்கிப்பட்டதால் ஜெர்மனியின் மக்கள் தொகை 27 சத விகிதம் கூடியது. அதன் நிகர உள் உற்பத்தி 24சத விகிதம் கூடியது. அதாவது 2,00,630 கோடி ரூபாய்களாகியது. அதன் ஏற்றுமதி மதிப்பு 81,32,000 கோடி ரூபாய்களாகும். ஜெர்மனியின் தேசிய வருவாய் 20,60,87,000 கோடி ரூபாய்களெனப் பெருகியது. அதன் மொத்தத் தேசிய வருவாயில் 20சத விகிதத்தை ஜெர்மனி மறு முதலீடு செய்தது.

1989 இலேயே கிழக்கு ஐரோப்பாவுக்கான ஏற்றுமதியில் மேற்கு ஜெர்மனியின் பங்கு மூன்றில் ஒன்றாக இருந்தது. கிழக்கு ஐரோப்பாவின் ஆட்சிக் கவிழ்ப்பின் பின் கடன் உதவி, நிதி ஏற்றுமதியில் ஜெர்மன் முதன்மை நிலையை வகித்தது. அங்கேரியில் ஐரோப்பிய நாடுகள் நிறுவியுள்ள 700 தொழில் நிறுவனத்தில் பாதிக்கு மேல் ஜெர்மனியினுடையதாக இருந்தது. ருசியாவில் 1000த்துக்கு மேல் கூட்டுத்தொழிலைத் தொடங்கியுள்ளது. ஜெர்மனி ஐக்கியத்தின் பின் ருசியாவையடுத்த பெரிய இராணுவ பலமிக்கதாக ஜெர்மனி மாறிவிட்டது. 6,67,400 துருபுகளையும், 8,145 கவச பீரங்கிகளையும், 842 போர் விமானங்களையும், 33 போர்க் கப்பல்களையும், 24 நீர்மூழ்கி கப்பல்களையும், அதிநவீன ஏவுகனைகளையும், இரசாயன உயிரியல் ஆயுதங்களையும் ஜெர்மனி கொண்டுமுள்ளது.

சமர் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உலகின் பிரதான எதிரி அமெரிக்காவே!

1991 அமெரிக்க 'பட்ஜெட்டில' இராணுவத்துக்கென்று 7,67, 520 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருந்தது. இதிலிருந்து 2.6 சத விகித அளவு 1992ல் குறைக்கப்படும் என்று அமெரிக்க இராணுவத் தலைமையகம் 'பெண்டகன்' முன்பு கூறியது. ஆனால் 1.2 சத விகிதம் அதாவது 10,400 கோடி ரூபாய்தான் குறைக்கப்பட்டது. அதே சமயம் 1992க்கான அறிவியல் தொழில்நுட்ப ஆராட்சிக்கு 1,96,560 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது முந்திய ஆண்டைவிட 13 சதவிகிதம் அதாவது 21,840 கோடி ரூபாய்கள் அதிகம். அறிவியல் தொழில்நுட்பம் ஆராட்சிக்கான நிதி ஒதுக்கீட்டில் 60 சத விகிதம் அதாவது 1,17,935 கோடி ரூபாய் இராணுவ-ஆயுதத் திட்டத்திற்கு பயன்படுகிறது. ஆகவே 1992ம் ஆண்டு அமெரிக்க பட்ஜெட்டின்படி 8,85,465 கோடி ரூபாய் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர பட்ஜெட்டின் நிதி ஒதுக்கீட்டில் விண்வெளித் திட்டத்திற்கு 9சத விகிதமும், ஏவுகணைவீச்சை முன்னேற்றுவதற்கு 17.5சத விகிதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தவிரவும் 38,760 கோடி கொண்ட விரைவுக் கணிப்பொறி, மற்றும் நூலிழைக் கண்ணாடி வலைப்பின்னல்களுக்கான திட்டமும் இராணுவப் பயன்பாட்டுக்கானவையே! நட்சத்திரப் போர் ஆராட்சிக்காக 11,560 கோடி ரூபாய்களை ஒதுக்கியும் உள்ளது.

---

## மூன்றாம் உலக நாடுகள் மறு காலனியாக்கல்

மூன்றாம் உலக நாடுகளில் சர்வதேச சந்தையில் மொத்த வர்த்தகப் பொருட்களுக்கு ஆதாரப் பொருட்களின் விகிதம் 1979ல் 40.5 சதவிகிதமாக இருந்தது. இது 87களில் 28.4 சதவிகிதமாகக் குறைந்தது. 1980-86களுக்கு இடையில் ஆதாரப் பொருட்களின் விலை 30சதவிகிதம் வீழ்ந்தது. சில மூலாதாரப் பொருட்களின் விலை கடந்த ஐம்பது ஆண்டுகளில் அதன் அடிமட்ட விலைக்குக் குறைந்து போனது. இந்தவகையில் வளரும் நாடுகளில் பொருளாதாரத்தை ஏகாதிபத்தியங்கள் அதிரடி நடவடிக்கை மூலம் பின்தள்ளியது. ஐக்கிய நாட்டுத் தீர்மானம் ஒன்றின்படி ஏகாதிபத்தியங்கள் அவற்றின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.7 சதவிகிதத்தை வளர்முகநாடுகளுக்கும், 0.15சத விகிதத்தை மிகவும் பின்தங்கிய ஏழைநாடுகளுக்கும் வளர்ச்சி நிதியாக ஒதுக்கும்படி கோரின. ஆனால் இத் தீர்மானத்தை ஏகாதிபத்தியங்கள் மதிக்கவில்லை. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகள் தமது மொத்தத் தேசிய உற்பத்தில் முறையே 0.21, 0.28, 0.32 என்ற விகிதத்தில் மட்டுமே நிதியளித்தன.

உலகநாடுகளில் ஏற்பட்ட புதிய போராட்டங்களைக் கண்டு அச்சம் கொண்ட ஏகாதிபத்தியம் 1990ல் கூடுதல் உதவி வழங்கச் சம்மதித்தன. இதன்படி 9,500 கோடி டொலரில் இருந்து 17,100 கோடி டொலராக உலகவங்கியும், 12,000 கோடி டொலரில் இருந்து 18,000 கோடி டொலராக ஐ.எம்.எவ்.ஃவும் பின்தங்கிய நாடுகளில் சொத்துமதிப்பை உயர்த்த ஒப்புக் கொண்டன. ஆஃபிரிக்க, கரீபிய, பசுபிக் நாடுகளுக்கான உதவியை 39சதவிகித அளவு அதாவது 935 கோடி டொலரில் இருந்து 1,300 கோடி டொலராக உயர்த்துவதற்கு ஐரோப்பிய சமூகம் ஒத்துக்கொண்டன.

உலகிலுள்ள மொத்த அறிவியலாளர்கள், ஆராட்சியாளர்கள், தொழில்நுட்ப நிபுனர்கள், பொறியியல் வல்லுனர்களில் 84 சதவிகிதத்தினர் ஏகாதிபத்தி நாடுகளில் குவிந்துள்ளனர். உலகின் மொத்த அறிவியல் தொழில்நுட்ப ஆராட்சிக்கும், அதன் முன்னேற்றத்திற்குமான செலவில் 94 சதவிகித அளவு ஏகாதிபத்திய நாடுகள் செய்கின்றன. இவற்றில் பின்தங்கிய நாடுகள் முறையே 11 சதவிகிதமும், 6 சதவிகிதமும் வகிக்கின்றன. ஏகாதிபத்தி நாடுகள் தமது மொத்தத் தேசிய உற்பத்தியில் 2.2 சதவிகிதம் அறிவியல், தொழிநுட்ப ஆராட்சிக்காக ஒதுக்குகின்றன. ஆனால் பின்தங்கிய நாடுகள் 0.4 சதவிகிதத்தையே ஒதுக்குகின்றன. உலகில் மொத்த கண்டுபிடிப்புகளில் 99 சதவிகிதமும், வடிவமைப்பு உரிமைகளுக்கான விண்ணப்பங்களில் 94 சதவிகிதமும் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து வருகின்றன. பின்தங்கிய நாடுகளில் வடிவமைப்புப் பதிவுகளுக்காக வருபவைகளில் கூட 84 சதவிகிதம் ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்தவைதாம்.

பல பாதகமான நிலையிலும் பின்தங்கிய நாடுகள் ஆலை உற்பத்தியை உயர்த்திக் கொண்ட. 1950-85 ஆகிய 35 ஆண்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.4 மடங்கு உயர்ந்தது. 1970-84 ஆகிய 15 வருடத்தில் பின்தங்கிய நாடுகளின் ஏகாதிபத்திய ஏற்றுமதிப் பங்கு 4.7 சதவிகிதத்தில் இருந்து 12.7 சதவிகிதமாக அதிகரித்தது. ஆனால் பின்தங்கிய நாடுகளைப் பாதிக்கும் வகையில் சர்வதேச வர்த்தக அமைப்பை ஏகாதிபத்தியங்கள் மாற்றியுள்ளன.

பின்தங்கிய நாடுகளுக்கு எதிராக வர்த்தக சார்பை ஏகாதிபத்தியங்கள் கடைப்பிடித்தன. இதனால் 1970ல் ஏற்றுமதி அதிகரிப்பு 13சதமாக இருந்தது. இது 1980ல் 8சதவீதமாக வீழ்ந்தது. 1979ம் ஆண்டோடு ஒப்பிடும்போது 1988ல் சாவதேச சந்தையில் ஆலை உற்பத்திப் பொருட்களின் விலை 33சதவீதம் உயர்ந்த அதேவேளை பின்தங்கிய நாடுகளின் ஆதாரப்பொருட்களின் விலை 2.7 சதவிகிதமே உயர்ந்தது. ஐ.எம்.எஃவ் கணக்கெடுப்பின் படி 1989வரை பின்தங்கிய நாடுகளின் மொத்தக் கடன் 1,32,000 கோடி டொலர்களாகும். இதில் பாதிக்கு மேலானது பத்தாண்டுகளில் வட்டி விகித உயர்வினால் ஏறிய கடன் சுமையாகும். புதியகடன்கள் பழையகடன்களைக் கொடுப்பதற்காகப் போய் முடிகின்றது.

ஐக்கியநாட்டுக் கணக்கெடுப்பின் படி 1983களில் இருந்து ஏகாதிபத்தியங்கள் பின்தங்கிய நாடுகளில் முதலிட்டதை விட கூடுதலான தொகையை ஏகாதிபத்திய நாடுகள் வட்டியாகவும், இலாபமாகவும் எடுத்துச் சென்றன. 1983-89 ஆகிய ஏழாண்டுகளில் பின்தங்கிய நாடுகளில் இருந்து ஆண்டுக்கு 5000 கோடி டொலர்வீதம் லாபமாவும் வட்டியாகவும் ஏகாதிபத்திய நாடுகளுக்குப் போய்விட்டது. இதனால் ஏகாதிபத்தியத்துக்கும் பின்தங்கிய நாடுகளுக்கும் இடையில் இடைவெளி அதிகரித்துச் சென்றவண்ணம் உள்ளது. 1983ல் இந்தவகை நாடுகள் 30தாக இருந்தது. இது 89ல் 42 நாடுகளாக மாறிவிட்டது.

ஒருநபருக்கு 125 டொலர் வீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியும், மொத்த உள்நாட்டு உற்பத்தில் 10சதவீதம் அளவுக்கு ஆலை உற்பத்தி. மக்களில் 20சதவீதம் படிப்பறிவு இல்லாத நாடுகள், பின்தங்கிய ஏழைநாடுகள் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. இப்படிப்பட்ட 42 மிகவும் பின்தங்கிய நாடுகளில் 28 ஆபிரிக்காவிலும், 13 ஆசிய பசுபிக் பிராந்தியத்திலும், 4 லத்தின் அமெரிக்காவிலும்

சமர் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளது. இந்நாடுகளின் மொத்த சனத்தொகை 42 கோடியாகும். இந்நாடுகளில் 75 முதல் 85 சதவிகிதத்தினர் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழுகின்றனர். இவற்றில் மொத்த ஆண்கள் தொகையில் 53 சதவிதம்முதல், பெண்கள் தொகையில் 73 சதவிகிதத்தினரும் படிப்பறிவு அற்றவர்கள்.

நைஜர் நாட்டில் 80சதவிகிதம் ஆண்களும், அப்பர்வோட் டாவில் 93சதவிகிதம் பெண்களும் படிப்பறிவில்லாதவர்கள். இந்நாடுகளின் மொத்த கூட்டு உற்பத்தியே 9,988 கோடி டொலர்கள்தான். அதாவது தனிநபர் வீதம் 205 டொலர் தான். அதிகபட்சம் போட்ஸ்வானாவில் 93 டொலர்கள். குறைந்த பட்சம் மொசம்பிக்கில் 64.5 டொலாகளாகும். 1980களில் இருந்து இந்நாடுகளின் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தி 1.0 முதல் 0.1 வரையினதாகக் குறைந்து போனது. தனிநபர் வருமானம் 2 சதவிகிதத்தால் குறைந்தது.

1988ல் இந்நாடுகளின் வாத்தகப் பற்றாக்குறை 960 கோடி டொலர்களாகும். அதேசமயம் கடன்தவணை மற்றும் வட்டியாக அந்நாடு திருப்பிச் செலுத்தவேண்டிய தொகை ஆண்டுக்கு 320 கோடி டொலர்களாகும். 1980களில் 2,610 கோடி டொலர்களாக இருந்த இந்தியக் கடன் 1989ல் 6,890 கோடி டொலராக அதாவது 163.7 சதவிகிதம் அதிகரித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவளர்ச்சிக்கான 1990ம் ஆண்டறிக்கைப்படி பின்தங்கிய இரண்டாம் முகாமின் மொத்த மக்கள் தொகையில் 77சதவிகிதத்தினர் அந்நாடுகளின் மொத்த வருமானத்தில் 15சதவிகிதத்தை மட்டுமே பெறுகின்றன. 100 கோடி மக்கள் வறுமை, பட்டினிக்குள் சிக்கியுள்ளனர். 18 கோடி குழந்தைகள் சத்துணவுப் பற்றாக்குறையில் வாடுகின்றனர். 150 கோடிப் பேருக்கு அடிப்படை மரந்து வசதிகள் கிடைக்கப் பெறாமல் உள்ளனர். 100கோடி முதியவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது.

இந்தவகையில் உலகை ஏகாதிபத்தியங்கள் கட்டுப்படுத்தி தமது கொள்ளைகளைத் தொடர்கின்றனர்.

**இப்புள்ளி விபரங்கள் 1990-91 களில் தொகுக் கப்பட்டது. இன்று இவை மெலும் விரிவடைந்து இருக்கும். இத்தொகுப்பில் ரூபாய் என்பது இந்திய ரூபாய் கள் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொண்டு படிக்கவும். 1990-91 இந்திய ரூபாயின் மதிப்பின்படி இதைக் கவனிக்கும் அதேநேரம் இலங்கை ரூபாய்களுக்கு இதக் கணக்கிடின் 2.2ஆல் பெருக்கவேண்டும். டொலர் என்பது அமெரிக்க டொலர்களாகும். இதுவும் 1990-91 மதிப்பின் படியே கட்டுரை வரையப்பட்டுள்ளது. இப்புள்ளி விபரத்தை புதிய உலக நிலைமைகளின் கீழ் சர்வதேச புரட்சிக் கடமைகள் என்ற புத்தகத்திலிருந்து சமர் உங்களுக்காக தொகுத்து வழங்கியது.**

**முற்றும்**

## வருந்துகின்றோம்

இம்முறையும் 2ம் உலக மாகாயுத்தம்... என்ற கட்டுரை இவ்விதழில் தொடர முடியவில்லை.
அடுத்த இதழில் தொடரும்


# வந்துவிட்டது!

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின்
5-வது
பாடல் கசெட்


# அண்ணன் வர்றாரு..

கிரிமினல் மயமான ஓட்டுச்சீட்டு அரசியல் முகத்திரையை உரித்தெடுக்கும் பால்கள்!

பழைய கசெட்டுக்கள் உட்பட பெற்றுக் கொள்ளலாம். உடன் சமருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

விலை
25F


## உங்கள் தொடர்புகளுக்கு



'SAMAR'
87, RUE DE COLOMBES
92600 ASNIERES SUR SEINE
FRENCE

**சந்தா தாபற்கணக்கு**

2.674.73 M
Centre de chequees postaux
75900 Paris chequees
FRANCE

**சந்தா அன்பளிப்புக்கான விபரங்கள்**

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | 6 பிரதிகள் | 60F |
| | 12 பிரதிகள் | 120F |
| ஐரோப். நாடுகள் | 6 பிரதிகள் | 100F |
| | 12 பிரதிகள் | 200F |
| ஏனைய நாடுகள் | 12 பிரதிகள் | 225F |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தித் திரட்டல்

# இறால் பண்ணைக்கு எதிராகப் போராடும் புத்தளம் மக்கள்

இன்று உலகில் ஏகாதிபத்திய நலன்பேணும் வகையில் உலகப் பொருளாதாரம் மாற்றப்பட்டு வருகின்றது. இந்தவகையில் சென்ற வருட ஆரம்பத்தில் உருவான ஒப்பந்தமே டங்கல் ஒப்பந்தமாகும்.

ஏகாதிபத்திய மேட்டுக்குடி மக்களின் நாக்கு ருசியைப் போக்க இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இறால் உற்பத்தியைச் செய்ய ஏகாதிபத்தியங்கள் நிற்பந்திக்கின்றன. மிகச்சிறந்த நன்நீர் உள்ள இடங்களையும், பயிர்செய் நிலங்களையும் இறால்பண்ணை அமைப்பதன் மூலம் அந்நிலங்களை உவர் ஆக்குவதுடன், இறால் வளர்ப்பில் ஈடுபடும்போது பாவிக்கும் இராசாயன மருந்துகள் நிலங்களை நஞ்சாக்குகின்றன.

இதன் மூலம் சுற்றுச்சூழல் மாசாவதுடன், அரிய உயிரினங்கள் அழிந்துபோவதுடன், இறால் பண்ணை நீர் கடலில் கலப்பதன் மூலம் மீனினங்கள் அழிவதுடன், கரையோ மீன்பிடியோ முற்றாக நாசமடை-கின்றது. மீன் அழிவதன் மூலம் கரையில் மீன் முட்டையிட்டுப் பொரிக்கும் நிகழ்வு இல்லாமற் போய் முற்றாக மீனினம் அவ்விடத்தில் அழிந்துவிடுகின்றது.

சட்டபூர்வமாகவும், சட்டவிரோதமாகவும் இந்த இறால் பண்ணைகள் அங்கு வாழும் அடிப்படை மீன்பிடி தொழிலாளர்களையும் சிறு, பெரு வி-வசாயிகளையும் பட்டினிச்சாவுக்குள் நகர்த்திவிடுகினர். அண்மைக்காலமாக இந்தியாவில் தமிழ் நாட்டில் இதற்கு எதிரான போரட்டங்கள் தீவிரம் பெற்று வருகின்றது.

இதுபோன்று புத்தளத்தில் ஆண்டிமுனைக் கிராம மக்கள் (பெருமளவில் பெண்கள்) அதிகாலையில் இருந்தே புதிய பண்ணைகள் அமைக்க வந்த புல்டோசர்களை மறித்து போராடினர். தம் பூமியையும், வேலையையும் இழக்கத் தயாரில்லையென குமுறும் இவர்கள் தன்னிச்சையாக போராடியுள்ளனர்.

இன்று ஏகாதிபத்தியக் காலனியாக மீள உருவாகிவரும் இந்த நிலைமைகளை எதிர்கொள்ளத் தேவையானது ஒரு புரட்சிகர அமைப்பும், அதன் கீழ் அணிதிரண்டு போராடும் மக்களுமே. இது மட்டுமே சொந்த மண்ணை மீட்பதுடன், சொந்த ஆட்சியை நிறுவவும் உதவும்.

## உழைக்கும் மக்களுக்கு கூலிகொடுக்க மறுத்த உழைக்காத அமெரிக்க பன்றிகள்

உலகையே சல்லடையிட்டு, உல-கையே சூறையாடிய செல்வத்தை விரவிட்டு எண்ணக்கூடிய சில அமெரிக்க நாய்கள் தமது ஆபாசக் கூத்துக்கும் ஆடம்பரமாக வாழப் பயன்படுத்துகின்றனர். இன்னுமொரு பக்கம் உலகைச் சூறையாடவென பணத்தை அள்ளித் தெளித்து விரயமாக்கி வருகின்றனர் உழைக்காத கூட்டத்தினர்.

இந்நிலையில் தான் 8 லட்சம் உழைக்கும் மக்களுக்கு உழைத்ததுக்கான கூலியைக் கொடுக்க மறுத்துள்ளது அமெரிக்க ஆட்சிப்பீடம். நிதிப்பற்றாக்குறை என கையை விரித்துள்ள இப்பன்றிகள். உழைக்கும் மக்கள் வீதியில் இறங்கிப்போரத் தொடங்கியுள்ளனர்.

## உலகில் நீண்ட சிறைவாழ்வைக் கழித்த கம்யூனிட்ஸ்டு விடுதலை!


அமெரிக்காவின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் தென் கொரியா அரசு, ஒரு கம்யூனிஸ்ட்டு என்பதால் 44 ஆண்டுகள் ஒருவரைச் சிறைக்குள் தள்ளியது.

கடந்த 44 ஆண்டுகள் சிறைவாழ்வை வாழ்ந்து விடுதலையாகியுள்ள சிம்சன் மியூங் வெளி உலகில் என்ன நடந்தது எனத் தெரியாத வகையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஓர் அரசியல் கைதிக்குரிய சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய எந்த வசதியும் வழங்கப்படவில்லை. அத்துடன் எந்தப் பத்திரிகையோ புத்தகங்களோ கூட வழங்கப்படவில்லை.

உலகில் ஜனநாயகம் பற்றி உரத்துக் கூக்குரலிடும் அமெரிக்காவும், அதன் அடிவருடிகளும் இதுபற்றி அலட்டிக்கொண்டது கிடையாது. இது ஒரு ஜனநாயக நடவடிக்கையாக அவர்களின் சுரண்டல் வழியில் இனம்காட்டினர்.

இன்று சிறையிலிருந்து வெளிவந்த கம்யூனிஸ்டு சிம் சன் மியுங் தான் தொடர்ந்தும் கம்யூனிசத்துக்காகப் போராடவுள்ளதாக பிரகடனம் செய்துள்ளார். அவர் வெளியில் வந்தபோது உலகில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றத்தைக் கண்டு அதிசயித்துப்போய் நிற்கின்றார். அந்தளவுக்கு இருண்ட ஒரு சிறையில், ஜனநாயக அமெரிக்காவின் செல்லப்பிள்ளை தென் கொரியா ஜனநாயக விரோதமாக அடைத்துத் துன்புறுத்தியதை இனம் காண முடிகிறது.



www.tamilarangam.net

# செய்திச் சிதறல்..

## தமிழர்கள் பயங்கரவாதிகள் என மீளவும் தலைப்புச் செய்தியாக உலகெங்கும்...

தமிழ் தேசிய விடுதலைப்போராட்டம் ஒரு பயங்கரவாதச்செயலாக உலகெங்கும் மீள ஒரு முறை பறைசாற்றப்பட்டு விட்டது.

உலக மக்கள் முன் இப்படித்தான் செய்திகள் இட்டுச் செல்லப்பட்டது. இது எப்படி நடந்தது. அண்மையில் கொழும்புக் குண்டுவெடிப்பும், நூற்றுக்கு மேற்பட்ட கொலை, 1000க்கு மேற்பட்ட காயங்களின் பட்டியல் இடப்பட்டு, உலகச் செய்தி அமைப்புக்கள் தமிழ் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்டதென பிரச்சாரப்படுத்தியுள்ளன.

கொழும்பில் மிக முக்கியமான இடத்தில் நடந்த இந்தக் குண்டுவெடிப்பு சாதாரண தமிழ், முஸ்லிம் சிங்கள மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளின் அடிப்படை கருதிக் கூடும் இடத்தில் நடந்துள்ளது.

அப்பாவி மக்கள் பற்றிய எந்தக் கரிசனையுமின்றி நடத்தப்பட்ட இத் தாக்குதல், அதன் விளைவும் தேசிய விடுதலைப் போராட்டத்தை சீரழிக்கும் வகையில் நகர்ந்துள்ளது. இன்று சர்வதேச ரீதியாக தமிழ் மக்கள் எந்த கவனிப்புமற்று உள்ள இன்றைய நிலையில், சந்திரிக்காவின் முற்போக்கில் உலகம் மயங்கிநிற்கும் இக்காலத்தில், இக் குண்டுவெடிப்பு அதன் பலிகளும், அதன் விளைவுகளும் சந்திரிக்காவை பலப்படுத்தியுள்ளது.

சந்திரிகா அரசு பற்றிய மாயை மேலும் வளர்க்கவும், போராடுபவர்களை வெறும் பயங்கரவாதக் கும்பலாகக் காட்டவும் இச்சம்பவம் மிகவும் பயன்பட்டுள்ளது. சந்திரிக்கா தவிர்க்க முடியாமல்தான் யுத்தத்தைத் தொடர்கின்றார் என பிரச்சாரம் செய்யும் கூட்டத்தாருக்கு இது ஒரு நல்ல வைரம்தான்.

சந்திரிக்காவின் இனவாத பாசிச பெருந்தேசிய இனவெறியை மூடிமறைக்க அப்பாவி மக்கள் மீதான இத்தாக்குதல் வழிசெய்துள்ளது. மாறாக இது பொருளாதார மையம் மீதான தாக்குதல் எனக் கூறுவது ஒரு பக்கம் மட்டுமே. மாறாக இதன் மறுபக்கம் தேசிய விடுதலையை கழுவில் ஏற்றிவிடுகிறது என்பதைப் பார்க்கத் தவறுவது என்பது வெறும் தாக்குதல்வாத கவர்ச்சிவாத அரசியற் பிழைப்புவாதமாகும். இதன் விளைவு தேசிய விடுதலைப் போராட்டத்தின் உண்மையை, அதன் தருக்கரீதியான நியாயத்தின் மீது சேறடிப்பதற்கும் இட்டுச் செல்கிறது.

## CIA கௌதமாலாவில் நடத்திய கொலை!


கொளதமாலாவின் இராணுவத்தில் அமெரிக்க உளவுப் பிரிவு ஊடுருவி பல அரசியற் கொலைகளை தொடர்ச்சியாகச் செய்தது. இதன் மூலம் அமெரிக்காவின் ஆதிக்கக் கொள்கையை நிலைநாட்டியது. இதை அம்பலப்படுத்திய மனித உரிமைக்கான ஒரு சட்டத்தரணியை வாசிங்டனில் வைத்து அமெரிக்கா உளவுப்பிவு 11-1-96ல் கொலைசெய்ய முயன்று தோற்றுப் போனது மட்டுமன்றி இதன் மூலம் அம்பலமாகியும் போயுள்ளது.

## அரசியல் அகதியை சொந்தப் பொருளாதார நலனுக்காகக் கடத்திய பிரிட்டன்

உலகில் ஜனநாயகக் காவலர்களான பிரிட்டன் சவுதி அரசியலின் மக்கள் விரோத பரம்பரை மன்னர் ஆட்சியை ஜனநாயக அரசாகக் காப்பாற்றுவது என்பது ஏனெனப் புரிந்து கொள்ள உதவும்.

உலகில் மிகப்பெரிய எண்ணையடிக்கும் திறந்த சந்தைக்கு சவுதி ஆட்சிப்பீடம் அகலத் திறந்துள்ளவரை பிரிட்டன் அதைக் காப்பாற்ற எல்லாவித மனித உரிமை மீறலையும் செய்யக் காத்துள்ளது. இந்தவகையில் சவுதி அரசியலின் மக்கள் விரோத ஆட்சியை எதிர்த்துப் போராடிய மொகமெட் எல் மசாரி பிரிட்டனில் அரசியல் அகதியாக புகலிடம் பெற்று அங்கிருந்து போராடினார்.

இதைச் சகித்துக்கொள்ள முடியாத முடிசூடாச் சர்வாதிகாரி சவுதி ஆட்சிப்பீடம் தமது எஜமான் மூலம் அவரை நாடுகடத்தியதன் மூலம், பிரிட்டன் தனது பொருளாதார நலனுக்காக எதையும் செய்யும் என்பதை மீளவும் ஒருமுறை நிலைநாட்டியுள்ளனர்.



www.tamilarangam.net

# துரோகிகளான மனித உரிமைக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழு சரிநிகரை கைப்பற்றுவதில் வெற்றிபெற்று வருகின்றனர்

இலங்கை வரலாற்றில் மீளவும் ஒரு துரோகக் கறை. இயக்கப் படுகொலைகளில் தொடங்கிய போராட்டக் கறைகள், மீளவும் ஒருமுறை நடந்துவிடட்து. கொழும்பிலிருந்து வெளிவருப் சரிநிகர் பத்திரிகையை, அதன் உள்ளார்ந்த சுயநிர்ணயம் மீதான கருத்துக்களைக் கண்டு சினந்துபோன இனவாத சந்திரிகா முற்போக்கு அரசும், அதன் எடுபிடிகளும் சினந்து போய் சுயநிர்ணயம் மீதான கருத்துக்களை மட்டும் வேட்டுவைக்கக் காத்து நின்றனர்.

இந்நிலையில்தான் மாாக்சிய வேடமிட்டு, மனித உரிமையின் பெயராலும் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள் என்ற பட்டப் பெயருடனும் சரிநிகரானது சுயநிர்ணய உரிமைக்காக குரல் எழுப்புவதைக் கண்டு அதைத் தடுக்க சந்திரிகாவுக்குத் துணையாக புறப்பட்டனர். இவர்களின் பணியை ஏகாதிபத்தியம் ஆசீர்வதித்து கண்காணிக்க, பொருந்தேசிய இனவாத சந்திரிகா அரசு சாமரம் வீச சரிநிகரின் மீது தொடர்ச்சியான தாக்குதலை நடத்தினர். இந்தவகையில் தனிநபர் மீது சேறடித்தல் முதல், சந்திரிகா அரசின் அனைத்துச் செல்வாக்கையும் பயன்படுத்தி சரிநிகரைக் கைப்பற்றுவதில் வெற்றிபெற்று வருகின்றனர்.

சரிநிகரை முற்றாகக் கைப்பற்றிய பின் இத்துரோகிகள் சுயநிர்ணயத்தை சரிநிகரில் நிலைநாட்டியவர்களை வெளியேற்றத் தயங்கமாட்டார்கள். பின் தேவையெனின் பல்வேறு துரோகக் குழுக்கள் மூலமோ அல்லது, சிறீலங்கா இனவெறி அரசின் மூலமோ அவர்களை வேட்டையாடவும் தயங்கார். ஏனெனில் துரோகிகள் தங்கள் முகத்தை மூடிமறைக்க முயலும் பணியில் இதுவே ஒரேயொரு வழியென எப்பொழுதும் நினைப்பார்கள்.

இந்தப்பணியில் முன்னாள் N.L.F.T உறுப்பினரும் பின்னாள் P.L.F.T யின் மத்தியகுழு உறுப்பினரும், தற்போது யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவில் இயங்குபவரும், ஐரோப்பிய பாராளுமன்ற விசேட அழைப்புப் பெற்று பலமுறை சந்தித்த பிரதிநிதியுமான மனோ ரஞ்சனும் இதிலொருவர் ஆவர். இவர் சரிநிகருடன் வெளிவரும் மற்றைய சிங்களப்பத்திரிகையில் ஓர் ஆசிரியருமாவார்.

மற்றையவர் டொக்ரர் - சிறிதரன் என்பவர். இவர் லண்டனில் இருந்தபோது N.L.F.T ஆதரவாளர். பின்னர் P.L.F.T விசு மரண் மடைந்த பின் P.L.F.T இன் பிரதான ஆலோசகரும் இவரே. அத்துடன் லண்டனில் இருந்து வந்தது முதல் பிரச்சனையில் அரசியலை விட புலி எதிர்ப்பையே கொண்டவர். அதற்காக யாருடனும் கூட்டுச்சேரத் தயாரானவர். உதாரணமாக: நான் பல்கலைக் கழகத்தில் கல்விபயின்ற காலத்தில் இவர் எனக்குப் பாடம் சொல்லித்தந்த ஓர் ஆசிரியராக இருந்தார். அப்பொழுது ராக்கிங்குக்கு எதிரான போராட்டம் எழுந்தது. அப்போராட்டத்தை முன்னெடுத்த நிலைகளில், பல்கலைக்கழகம் செயற்படமுடியாத ஒரு முடக்க நிலைகளில் இருந்தது. ராக்கிங்குக்கு எதிராக புலிகள் இயங்கியதுடன் அதில் வன்முறையை எடுத்த எடுப்பில் கையாண்டு வந்தனர். இந்நிலையில் டொக்ரர் சிறிதரன் என்னை அழைத்து கூறினார்: ராக்கிங்குக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம். ஏனெனில் ராக்கிங்குக்கு எதிரான போராட்டம் புலிகளுக்கு எதிராக இருப்பதால் மாணவர்களைப் பலப்படுத்த வேண்டியது எமது கடமை என்றார். இன்று ராக்கிங்குக்கு எதிரான போராட்டம் அரசியல் இல்லை. புலிகளுக்கு எதிரான போராட்டமே முக்கியம் என்றார்... இந்நவகையில் புலிகளுக்கு எதிரான எதிர்ப்பு மட்டுமே பிரதானமாக அன்றே பார்த்த இவர் மற்றைய முரண்பாடுகளை கைவிடவும் அத்துடன் சமரசமடைந்து புலியை எதிர்க்க ஆலோசனை வழங்கியவர். இன்று இவர் சிறிலங்கா இனவெறி அரசுடனும், உலக ஏகாதிபத்தியங்களுடனும் சேர்ந்து மனித உரிமை மீளல் பற்றி ஒருதலைப் பட்சமாக மாயாஜாலம் செய்யும் ஒரு மோசடியை செய்து புலி எதிர்ப்பு வியாதிபிடித்துப் போயுமுள்ளார்.

இவ்விருவரும் தலைமைதாங்க இன்று எதிர்ப்புரட்சியுடன் கூடிய துரோகம் கொடிகட்டிப் பறக்கிறது. 1993-94 களில் P.L.O.T மார்க்சிசம் பேசிய ஒரு கூட்டம் எப்படி P.L.O.T யின் ஆராஜகத்தை மாாக் சிசம்பேசி பாதுகாத்தனரோ, அதே வேலையை இன்று சந்திரிக்காவைப் பாதுகாக்க எல்லாவிதமான சொல்லடுக்குகளுடனும் சுயநிர்ணய உரிமைக்கான சிறுபான்மை இனத்தின் கழுத்திலேயே சுருக்கை மாட்டும் தொழிலைச் செய்து வருகின்றனர். இவர்கள் நவ மாாக்சிசத்தை தமது தத்துவமாக வரிந்துள்ளதுடன், இவர்கள் P.L.F.T யாக இருந்த காலத்தில் இந்தியாவில் எஸ்.வி. ராஜதுரை முதல் எல்லா மார்க்சிச விரோதிகளினதும் ஆலோசனையைப் பெற்றதுடன் கூடிக்குலாவி இந்நிலைக்கு சீரழிந்துள்ளனர்.

இதற்கான தவறை விசுவே அன்று தொடங்கியிருந்தார். விசுவின் போராட்ட வரலாற்றில், இலங்கையில் மா-லெனினிய அடிப்படையை பாதுகாப்பதில் எப்படி போராடி, அதன் வித்துக்களை விதைத்த போதும் மறுபுறமாக இந்தியாவின் சீரழிந்த மாாக்சிச விரோதிகளின் உறவை ஒருக்காலும் கைவிடவில்லை. அங்கு புரட்சிக்கான அமைப்பைக் கட்டியவர்கள் இவரின் நடத்தையைச் சுட்டிக்காட்டி N.L.F.Tஇன் மத்திய குழுவுக்கு எழுதிய கடிதத்தை இவர் திட்டமிட்டு மறைத்ததுடன், அச்சீரழிவுவாதிகளுடன் உறவைத் தொடர்ந்தார். அதன் மூலம் மா-லெனினிய அடிப்படைக்கு எதிரான விதைகளையும் கூட விதைத்து விட்டே சென்றார். அவர் தனது அணிகளை இவர்களுடன் உறவாட வைத்தது மட்டுமன்றி இன்று நவ மாாக்சிசத்தைத் தத்துவமாகக் கொண்டே தமது துரோகத்தை நியாயப்படுத்துகின்றனர். எல்லாவித மா-லெ விலகலும் ஒரு நிலையில் துரோகத்துக்கு இட்டுச் செல்கிறது என்பதை மனித உரிமையின் பெயராலுள்ள துரோகிகளின் வரலாறும் மீளவும் ஒருமுறை சுட்டிக் காட்டுகிறது. அதேநேரம் சுயநிர்ணயத்தை உயர்த்திய சரிநிகர் ஆசிரியர்களின் ஒரு பகுதியினர் கடந்தகால எமது விமர்சனத்தையோ, வேறுசிலரின் விமர்சனத்தையோ நிராகரித்தபோது, அவர்கள் தமது கடந்தகால போராட்ட வரலாற்றுத் தொடர்ச்சியை கற்றுக் கொள்ளவில்லை என்பதை பறைசாற்றியது. மீளவும் ஒரு படிப்பினை தேவையில்லை. இன்றே சுயவிமர்சனமும், சுயநிர்ணயத்தை எதிர்ப்புரட்சிக்கு விட்டுக் கொடுக்காது எப்படி அடைவது என்பதை கற்றுக்கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரஞ்சு தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சியும், தொழிற்சங்கத்தின் காட்டிக்கொடுப்பும்

பிரஞ்சு வரலாற்றில் கடந்துசென்ற கார்த்திகை, மார்கழி மாதங்கள் மீளவும் ஒருமுறை பதியப்பட்டுவிட்டது. ஆம், பிரஞ்சுத் தொழிலாளிகள் தன்னிச்சையாக, தொழில் சங்கங்களின் காட்டிக் கொடுப்பையும் மீறி வீதிகளில் இறங்கினர். இதில் வில்லங்கத்தனமான தலையீட்டை நடத்திய தொழில் சங்கங்கள் சந்தர்ப்பம் பார்த்து இருந்து போராட்டத்தையே காட்டிக்கொடுத்தனர்.

20 லட்சம் தொழிலாளிகள் வீதியில் ஆர்ப்பாட்டம் செய்ய 50 லட்சம் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். இது அரசு சார்ந்த தொழில் கழகங்களில் மட்டும் நிகழ்ந்தன. தனியார் தொழில் கழகங்களில் வேலை நிறுத்தம் நடந்துவிடக் கூடாது என்பதில் தொழில் சங்கம் மிகவும் கவனமாக இருந்தன. ஒரு மாதம் நாட்டையே செயலிழக்கச் செய்த இப் போராட்டம் எப்படிக் கைவிடப்பட்டது என யாருக்குமே தெரியாமல் போய்விட்டது. பிரஞ்சு மக்களே என்ன நடந்ததென கேள்வி எழுப்புகின்ற நிலைமைகளில் மீளவும் இப் போராட்டம் தொடங்குமென்ற எதிர்பார்புகளை பல தரப்புக்களிலிருந்தும் வெளியிடப்படுகின்றன.

ஒரு மாதமாக நிகழ்ந்த இந்தப் போராட்டம் 8 ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை பிரஞ்சு முழுக்க நடத்தினர். இதன் உச்சக்கட்டத்தில் 23 லட்சம் பேர் ஊர்வலத்தில் பங்குகொண்டனர். அரசாங்கம் இழுத்தடிப்புப் பேச்சு வார்த்தைகளை நடத்த, தொழில் சங்கங்கள் காட்டிக் கொடுப்புடன் பேச்சுவார்த்தை நாடகமாட, போராட்டத்தைத் திட்டமிட்டே மந்தமடைய வைத்ததுடன், சட்டபூர்வ வழிகளில் மட்டும் போராட்டத்தை நகர்த்தி நடுரோட்டில் தொழிலாளர்களை இட்டுச் சென்றனர். இவைகளையும் மீறி பல இடத்தில் போராடியவர்கள் போர்க்குணத்துடன் போராடியதும், பொருளாதாரக் கோரிக்கையின் எல்லையைத் தாண்டி அரசியல் கோசத்துடன் போராடத் தொடங்கினர். இந்நிலையில் தான் அரசு - தொழில் சங்கங்கள் கூட்டாகத் திட்மிட்டு போராட்டத்தைக் காட்டிக் கொடுத்ததுடன், சோசலிசக் கட்சி, கம்யூனிசக் கட்சி என்பன பச்சையாகப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தது.

இதே நேரம் எழுந்த மாணவபோரட்டம் தொழிலாளர்கள் போராட்டத்துடன் கைகோர்த்த நிலை என்பது அரசைப் பீதியடைய வைத்தது. அரசும் அவசரமாக மாணவர் போராட்டத்திற்கு அரைகுறைத் தீர்வை வைத்ததன் மூலம் மாணவர்கள் போராட்டத்தை சீர்குலைத்த நிலையில், ஒரு பகுதி மாணவர்கள் தொடர்ந்தும் தொழிலாளர்களுடன் கைகோர்த்து போராட்டமானது காட்டிக் கொடுக்கும் வரை வீதியில் இறங்கிப் போராடினர்.

பிரஞ்சு மக்களின் போர்க்குணம் மிக்க இப்போராட்டம், மற்றும் பிரஞ்சு சமுதாயத்தின் இன்றைய நிலையென பல தரவுகளை உள்ளடக்கிய ஒரு சிறப்புக் கட்டுரையை அடுத்த சமரில் வெளியிட உள்ளோம். இதன் மூலம் பிரஞ்சு சமூகம் பற்றி ஓர் அறிவை, அங்கு நடக்கும் போராட்டங்களை வாசகர்கள் புரிந்துகொள்ள முடியும்.



## அரசாங்கம் யாருக்காக?

பாவுவா நியூ சினியா என்னும் நாட்டில் ஆஸ்திரேலியாவின் பன்னாட்டு நிறுவனமான "பி.ஹெச்.பி" தங்கம் மற்றும் தாமிரம் வெட்டியெடுக்கும் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தின் மீது, அந்த நாட்டின் சுற்றுச்சூழலைப் பாழ்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு 14,000 இந்திய ரூபாய் நஷ்டஈடு கோரி வழக்குத் தொடரப்பட்டது. அந்நாட்டு அரசு

இப் பன்னாட்டு நிறுவனத்துடன் கைகோர்த்துக் கொண்டு இவ்வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டது. மேலும் யாரேனும் இனி நஷ்டஈடு கோரி வழக்குத் தொடர்ந்தால், அவர் 35 லட்சம் இந்திய ரூபாய் அபராதம் கட்டவேண்டும் என்று சட்டமொன்றையும் இயற்றியுள்ளது.

நன்றி! புதிய ஜனநாயகம்.



# 2ம் உலகயுத்த நாசிகளின் வழியில் புதிய நாசிசப் படுகொலைகள்

அண்மையில் ஜெர்மனியில் நாசிகள் கருப்பு இன அகதி மக்கள் வசித்த குடியிருப்புத் தொகுதி மீத தக்குதல் நடாத்தி தீவைத்தனர். இதனால் பத்துக்கு மேற்பட்டோர் கருகி மாண்டுபோயினர். பலர் காயமடைந்தனர்.

நாசிகளின் இத்தாக்குதல் உலகையே குலுக்கியது. கடந்த காலத்தில் ஜெர்மனிய ஜனநாயகக் காவலர்கள் நாசிசத்தின் வளர்ச்சிக்கு மறைமுகமாக உதவிவந்த பல்வேறு செயற்பாடுகள் இக் கொலை மூலம் உலகெங்கும் அம்பலமாகியுள்ளது.

ஐரோப்பிய யூனியன் என்ற ஏகாதிபத்திய கூட்டுக்கனவு ஜெர்மனிய ஆளும் நாசிகளின் முகத்தால் சீரழிந்து விடுமோ எனப் பயந்துபோய் உள்ளனர் மற்றைய மேற்குநாடு ஆளும் பீடத்தினர். இதன் தொடர்ச்சியில் ஜெர்மனிய ஆளும் பீடம் நடவடிக்கை என்று பூச்சாண்டிகாட்டி தொடர்ந்து நாசிகள் சார்பாக இயங்குகின்றது.

இதற்கு எதிரான போராட்டத்தில் கருப்பு இனத்தவர் மட்டும் பெரும்பான்மையாக கலந்து கொண்டது என்பது நிற, நாட்டுரீதியில் கூட பொதுவான பிரச்சனைக்கு எதிராகப் போராடும் தளத்தை இழந்துள்ளனர்.

இதை ஜெர்மனிய கம்யூனிசக் கட்சியின் காட்டிக்கொடுப்புக்கள் உடனும், அவர்களின் நாசிசத்தின் ஆதரவுடனும் இனகாண முடியும்

ஜெர்மனிய தொழிலாளர் வர்க்கத்தை விழிப்புற வைப்பதும், அதனுடன் இணைந்து நாசிகளுக்கு, அதன் ஆதரவாளர்களின் ஆட்சியையும் அம்பலப்படுத்தி போராடுவதே அகதிகளுக்கான பாதுகாப்பிற்கான ஒரே வழியாகும்.



**வாசகர்களே! உங்களிடமிருந்து தரமான ஆக்கங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.**

சமர் - 18 வெளியீடு: தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் ஐப்-தை பதிவு: 3-16956

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்